ஒற்றுமையாலல் வெற்றி நிச்சயம்

சர்வாதிகாரப் போக்குக்கு சாவுமணி அடிப்போம்

தொழிலாளி

இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 1 இதழ் 17 | டிசம்பர் 28, 1963 | பக்கங்கள் 8 | விலை சதம் 10

புரட்சிகரத் தொழிலாளி வர்க்கத்தின் பேரணி

சி.டி.யூ.எப். மாநாட்டின் நாலு நாள் நிகழ்ச்சிகள்

18 முதல் 21-ந் தேதி வரை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற, சி.டி.யூ.எப். பின் 16-வது மாநாட்டின் நாலு நாள் நி ழ்ச்சிகளின்சுருக்கத்தை இங்கு தந்துள்ளோம்.



தோழர் வாட்சன் பர்ணந்து
தலைவர்

ஈழத்திருநாடும், உலகத்துத் தொழிலாளர்களும் உன்னிப் பாக அவதானித்த சி.டி.யூ. எப். மாநாடு, சென்ற 18-ந் தேதி கொழும்பு புதிய டவுண் ஹாலில் ஆரம்பமாகியது.

மண்டப வாயிலின் இருமருங் கிலும், செங்கொடிகள் பட் டொளி வீசிப் பறந்தன. சம் பிரதாயத் தோரணங்கள் வெளித் தோற்றத்திற்கு அழகு தந்தன. செஞ்சட்டை அணி ந்த தொண்டர் படையினர், புதுப் பொறுப்பேற்று புரட் சித் தளபதிகளாக உத்வேகத் தோடு காட்சி தந்தார்கள்.

மேடையின் பின்னணியில், பொன்மூலாம் பூசப்பட்ட ஈழத்தில், உலகத்து உழைப் பாளர்களின் சின்னம் ஒளி வீசி யது. மண்டபமெங்குமிருந்த செங்கொடிகள், மண்டபத்தில் கூடியிருந்த பிரதிநிதிகள் கூட் டத்திற்கு புது உறுதி தந்திருக் கும் என்பதில் ஐயமில்லை.

வரவேற்புக்கமிட்டியின் சார் பில் தோழர் ஏ. ஜெயசூரிய, பிரதிநிதிகளை வரவேற்றார். பின், தலைமைக் குழு அங்கத்த வர்களின் பெயர்களைப் பிரே ரித்தார்.

எம். ஜி. மெண்டிஸ், சார்ல்ஸ் ஹாமி, டி. விமலகுனே, சுசிமா டி சில்வா, ஏ. ஆர். எட்மன், பி. எக்மன், டி. ஏ. சேதுங்க, தங்கராஜா ஆகியோர் தலை மையில் மாநாடு ஆரம்பமா யிற்று.

பழம்பெரும்ஈழத்துத்தொழி லாளியும், தொழிற்சங்கவாதி யுமான தோழர் சார்ல்ஸ் ஹாமி, மாநாட்டு துவக்க விழா உரை நிகழ்த்தினர். இரு தய நோய் காரணமாக ஆஸ் பத்திரியில் சிகிச்சை பெறும் தோழர் வாட்ஸன் பெர்ணந் துவின் வாழ்த்தை தோழர் டி. ஹென்ரி வாசித்தார்.

இவ்வேளையில், மண்டபத்தி னுள் நுழைந்த இந்தோனே ஷிய, சீனப் பிரதிநிதிகளை முழு மண்டபமும் எழுந்து நின்று பிரமாண்ட கரகோஷமிட்டு வரவேற்றது. நீண்ட நேரம் வரவேற்புக் கரகோஷம் நீடித் தது.

தோழர் எம். ஜி. மெண்டிஸ் தனது தலைமையுரையில், சி.டி. யூ.எப்.பின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, ஆரம்ப முதல் முடிவுவரை சண்முகதாஸன் எதிர்ப்பு வசை புராணம் பாடினர். தனது உரையின் இறுதியில் மண்டபத் தை விட்டு வெளியேறினர். தனது பதிலைக் கேட்டுவிட்டுச் செல்லுமாறு தோழர் சண்முக தாஸனும், கூடி இருந்த பிரதி நிதிகளும் மெண்டிஸைக் கோரி னர். ஆனால், மெண்டிஸ் விறு விறு என்று வெளியேறி னர். அவருடன் 22 பிரதிநிதி களும், 40 பார்வையாளர் களும் வெளிநடப்புச் செய் தனர்.

மெண்டிஸ் வெளிநடப்புச் செய்த வேளையில், மண்டபத் திற்கு வெளியே கூடி நின்ற வி. ஏ.சமரவிக்ரம, பிரிட்டோ, பண்டித்தா, மரதாஜ எல் பட், ஜெக் பெரேரா, எஸ். ஜே. டி. சில்வா ஆகியோர் களின் தலைமையில் சில கூலிக் குப் பிடித்த ரௌடியர்கள் புதிய நகரமண்டபத்தின் மீது கல்மாறிப் பொழிந்தனர். தோழர் சண்முகதாஸனின் காரைத் தாக்கினர். அதோடு, சில கொடிகளையும் பிடுங்கி எறிந்தனர். கட்டளைப் பிரகா ரம், 10 நிமிடங்கள் வரை பொறுமையோடு சகல காடைத்தனங்களையும் பார்த் துக்கொண்டிருந்த தொண்டர் படையினர், பொறுமை இழ ந்து, காடையர் கூட்டத்தை அப்புறப்படுத்தி, அமைதியை நிலைநாட்டினர். ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்ட மூவ ரில் யாருமே தொழிலாளர்க ளல்ல; பிரதிநிதிகளுமல்ல.

— 8-ம் பக்கம் பார்க்க

பீக்கிங் தமிழ் ஒலிபரப்பு

பீக்கிங் வானொலியில் தினசரி
இரவு இலங்கை நேரம்
8·00-8.30 10.00-10.30
50, 43, 41, 32, 42, 30
மீட்டர் வரிசைகளில்
தமிழ் ஒலிபரப்பு நடைபெறுகிறது

21 கோரிக்கைகளை வென்றெடுப்போம்

சரித்திர பிரசித்திமிக்க சி.டி.யூ.எப். மாநாடு, இலங்கையிலுள்ள 9 பிர தான தொழிற்சங்கங்கள் முன்வை த்த 21 கோரிக்கைகளை ஏகமன தாக அங்கீகரித்ததுடன், அதற்காக சளையாது போராடச்சபதமேற்றது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நாளுக்கு நாள் கூடிவரும் வாழ்க்கைச் செலவுகளும், அவ சியப் பொருட்களின் விலை அதி கரிப்பும், மறுபுறம் ஆட்சியாள ரின் சம்பளக் குறைப்புக்கொள் கையைப் பின்பற்றி, தனியார் துறை கம்பனிகள் சலுகைகள் மறுப்பதும், தொழிலாளர்களை எண்ணரிய தொல்லைகளுக்கும், துயர்களுக்கும் ஆளாக்கி வருகி றது.

இத்தொல்லைகள் போதா மைக்கு, ஆட்சியாளரும், பெரு முதலாளிகளும், ஏற்கெனவே தரப்பட்ட பல சலுகைகளையும் தட்டிப்பறிக்க முற்பட்டிருக் கின்றனர்.

நியாயமான தமது குறை களையும், துயர்களையும் நீக்க சமாதான முறையைக் கை யாண்டு, தோல்விகண்டு, வேலைநிறுத்த ஆயுதத்தைத் தொழிலாளர்கள் மேற் கொண்டு வருகின்றனர்.

அண்மையில் நடைபெற்ற வெள்ளவத்தை மில், இ.போ. ச., கஸ்டம்ஸ் வேலைநிறுத்தங் களும், இன்று நடைபெற்று வரும் துறைமுக ஊழியர் வேலைநிறுத்தமும் இவைகளில் சிலவாகும்.

தொழிலாளர்களின் நியாய மான வேலைநிறுத்தங்களை ஆட் சியினர் தமது பிடிவாதப் போக்கு மூலமும், ராணுவ, போலிஸ் காட்டுமிராண்டித் தனங்கள் மூலமும் முறியடிக்க முனைந்து வருகின்றனர். இந்த கேடுகெட்ட கொள்கைக்கு மஹாஜன சமரவீரா தலைமை தாங்குகிறார்.

வேறு எப்பொழுதையும்விட தொழிலாளர் ஒற்றுமை இன்று அவசர அவசியமாகியுள்ளது. 21 பொது கோரிக்கைகளின் அடிப்படையில் ஒருமிப்போம். ஏதேச்சாதிகாரப் போக்கில் செல்லும் ஆட்சியினருக்கு நமது சக்தியைப் பிரகடனப் படுத்துவோம், வெற்றி பெறு வோம்.

தொழிலாளர் ஐக்கிய அணி யில் ஒன்று திரள வாரீர்!

நேயர்களுக்கு

புது வருட விடுமுறைகளை முன்னிட்டு, அடுத்த வாரத் 'தொழிலாளி, வெளியிடப் பட மாட்டாது.

வாசக நேயர்கள், ஏஜெ ண்டுகள், ஆதரவாளர்கள், விற்பனைத் தோ ழ ர் க ள் அனைவருக்கும் எமது புத் தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொ ள் கி றோம்.

—நிர்வாகி

அண்மையில் செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின்கொழும்பு டிஸ்றிக்ட் மாநாட்டில், புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட செயலாளர் தோழர் டி. கே. டி. ஜினேந் திரபால உரை நிகழ்த்துகிறார். மாநாட்டிற்கு தோழர்கள் ஏ..ஜெயசூரியா, எச். எம். பி. முஹி தின், டபிள்யூ. ஏ. தர்மதாஸ ஆகிய மூவரைக்கொண்ட தலைமைக்குழு தலைமை தாங்கியது.

புரட்சியா, பாராளுமன்றமா?

சென்றவாரத் தொடர்ச்சி

திரிபுவாதிகளின் மார்க்ஸிஸ - லெனினிஸ விரோத கருத்துக்கள்

"திரிபு இல்லாத மார்க்ஸிஸத்தைப் பொது மக்களுக்குக் கொடுக்க விருப்பமுள்ள ஒருவன் அறிவுச் சுடர் ஏந்தி ஆராய்ச்சிச் சுரங்கத்தில் இறங்கவேண்டும்" என்றார் லெனின். இது சிரமமான வேலைதான். நேரடியானதும் கூட. என்றாலும் இன்று கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள் புகுந்துள்ள திரிபுவாதங்களையும், சீர்திருத்த வாதங்களையும் சரியான முறையில் இனங் கண்டு கொள்வதற்கும், இவற்றின் குணம்சத்தை பாட்டாளி வர்க்கத்தை எத்திசைக்கு இழுத்துச் செல்லக் கூடியது என்பதை-தெளிவுறத் தெரிந்து கொள்வதற்கும் இது மிக, மிக அவசியம். அதோடு மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் வாழ்ந்த காலங்களில் இருந்த திரிபுவாதங்களையும், தொழிலாளி வர்க்கத்திற்கு எதிரான-மார்க்ஸிஸ லெனினிஸத்திற்கு விரோதமான-இதர தத்துவங்களையும் ஒவ்வொரு கம்யூனிஸ்டும், பாட்டாளி வர்க்கமும், சோஷலிஸத்தின் மீதும், கம்யூனிஸத்தின் மீதும் விருப்பமும், விஸ்வாசமுள்ள சகல மக்களும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் இன்றையத் திரிபுவாதங்களையும், சீர்திருத்த வாதங்களையும் மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்ட் வழியில் நின்றுஎதிர்த்துப் போராடி அவற்றை உடைத்தெறிய முடியும். மேலும், இன்றைய அரசியல் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டருக்கும் "ஜனநாயக சோஷலிஸமும்," "படிப்படியான சோஷலிஸமும்," "சமாதான சோஷலிஸமும்," "சோஷலிஸ மொடல் சமுதாயம்" என்ற லேபில்கள் ஒட்டப்பட்டுள்ளே பாட்டாளி யர்க்த்துக்கு விரோதமான-மார்க்ஸிஸ-லெனினிஸத்திற்கு எதிரான—தத்துவங்களை உங்கிய அழுகிய, உளுத்துப்போன முதலாளித்துவ, பிற்போக்குச் சரக்குகளையும் அப்புறப் படுத்த முடியும்; பேரையாற்றுக்குள் வீசி எறிய முடியும்.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் காலங்களிலும், அவர்களுக்கு முன்பு வாழ்ந்த முதலாளித்துவ அரசியல், பொருளாதார தத்துவப் பண்டிதர்கள் எத்தனையோ நூல்களை எழுதிக் குவித்தார்கள். இவர்கள் அனைவரும் சுரண்டலும், வர்க்க பேதமுள்ள சமூக அமைப்பும், வறுமையும், சாதி, மத, இன வேற்றுமைகளும் இயற்கையானது என்று வாதடினார்கள். தனிச் சொத்துரிமை புனிதமானது என்றும், அரசாங்கம் என்பது வர்க்கம் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது என்றும், எனவே, அதனுடைய அதிகாரங்களில் பிரஜைகள் தலையிடக் கூடாது என்றும், சகல சமுதாய சீர்திருத்தங்களும் அந்தந்த நாடுகளின் அரசியல் அமைப்புகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டுத்தான் நடைபெறவேண்டும் என்றும், அரசாங்கத்தை அழிக்கவோ, மாற்றியமைக்கவோ கூடாதென்றும் வலியுறுத்தினர்கள். இவற்றிற்கெல்லாம் பலரகமான தத்துவ முலாம் பூசி, நியாயம் கற்பித்தார்கள். இவை அனைத்தும், முதலாளித்துவ, அரசியல், பொருளாதார சமூக அமைப்பைக் கட்டிக் காக்கும் தத்துவங்கள் என்றும், இவற்றினுல் பாட்டாளி மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை என்றும் மார்க்ஸிஸத்தின் மும் மூர்த்திகளான மார்க்ஸ், எங்கெல்ஸ் லெனின் ஆகியோர் விஞ்ஞான ரீதியாக நிரூபித்துக் காட்டினார்கள்.

மேற்கூறிய முதலாளித்துவப் பண்டிதர்களைவிட, இன்னொரு சாரார் நடுத்தர வர்க்கத்திலிருந்து தோன்றினர்கள்.

19-ம் நூற்றாண்டு முதலாளித்துவம் கொஞ்சமும் நெஞ்சிரக்கமின்றி பாட்டாளி வர்க்கத்தைக் கர்ண கடூரமாகச் சுரண்டியது. 14-15 மணித்தியாலங்கள் வேலை வாங்கியது. பாட்டாளி வர்க்கத்திற்கு இன்றுள்ள ஜனநாயக உரிமைகளைக் கூட அன்று தர மறுத்தது. அடக்குமுறைகளினுலும், கொடுங்கோல் முறைகளினுலும் வாட்டி வதைத்து, போதிய குடியிருப்பு வசதிகளை அளிக்காது சுகாதாரமற்ற இருண்ட கொட்டடிக்குள் அடைத்தது. துன்புறுத்தியது, பெண்களையும், இளம் பிள்ளைகளையும்கூட கடுமையாக வேலை வாங்கியது. இவற்றைக் கண்ட நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சில அரசியல் பொருளாதாரப் பண்டிதர்கள், மனிதபிமானத்தால் தூண்டப்பட்டு, பாட்டாளி வர்க்கத்தின்மீது இரக்கங் காட்டினார்கள். அவர்களுக்குச் சில உரிமைகள் வழங்க வேண்டுமென்று வற்புறுத்தினர்கள். வேலை நிறுத்தங்களையும், வர்க்கப் போராட்டங்களையும் அங்கீகரித்தார்கள். ஆனால், வறுமை, சுரண்டல், துன்பம், அடிமைத்தனம், திருட்டு, கொள்ளை முதலிய சமுதாயத் தீமைகளைக் கடுமையாக விமர்ச்சித்தார்களே தவிர, ஒரு முகமாக முதலாளித்துவத்தைக் கண்டித்தார்களே தவிர இவற்றிக்கெல்லாம் காரணமான முதலாளித்துவ அமைப்பை மாற்றியமைக்க விரும்பவில்லை. முதலாளித்துவ தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய சோஷலிஸட்-கம்யூனிஸ்ட் அமைப்மையும், இதற்கு அவசியமான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் அங்கீகரிக்கவில்லை. சுருங்கச் சொன்னுல் இவர்கள் அனைவரும் முதலாளித்துவத்திலுள்ள குறைபாடுகளை வன்மையாகக் கண்டித்து, அவற்றைக் களைந்து அதைத் திருத்த முயன்றார்களே தவிர, அதற்குமேல் அவர்கள் சிந்திக்கவேயில்லை! இவர்களைப் பற்றி மார்க்ஸும், எங்கெல்ஸும் தமது "கம்யூனிஸ்ட் அறிக்கை"யில்பின்வருமாறுகுறிப்பிட்டிருக்கிறார்கள்.

"பூர்ஷ்வா சமுகம் தொடர்ந்திருப்பதை உறுதிப் படுத்துவதற்காகச் சமுகக் குணங்களை அகற்ற வேண்டுமென்று பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒரு பகுதி ஆசைப்படுகிறது.

"பொருளாதார நிபுணர்களும், பரோபகாரிகளும் மனிதாபிமானிகளும், தொழிலாளி வர்க்க நிலைமையைச் சீர்திருத்த விரும்புவோரும், தர்மம் நடத்துபவர்களும், மிருகங்களுக்குக் கொடுமை இழைப்பதைத் தடுக்க விரும்பும் ஜீவகாருண்ய சவ்வ உறுப்பினர்களும், தன்னடக்க வைராக்கிய தீரர்களும், மூலை முடுக்குகளில் சீர்திருத்தம் செய்ய விரும்பும் பலவகைப்பட்ட பேர்வழிகளும் இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள். மேலும், இந்த சோஷலிஸ முறை பூர்த்தியான ஏற்பாடுகளாக வகுக்கப்பட்டுள்ளது!" (பக்கம் 64)

இளங்கீரன்

இதை மார்க்ஸும், எங்கெல்ஸும் "கன்சர்வேடிவ் சோஷலிஸம்" அல்லது "பூர்ஷ்வா சோஷலிஸம்" என்று குறிப்பிட்டார்கள். இதைப் போல வேறு பலரக சோஷலிஸத் தத்துவங்களும் அக்காலங்களில் உலவின.

அன்றைய ஐரோப்பாவில் நிலப் பிரபுத்துவ சமுதாயம் தகர்ந்து தரைமட்டமாகி, அது இருந்த இடத்தில் முதலாளித்துவ சமுதாயம் உருவாகி வளர்கின்ற காலத்தில் புதிய வர்க்க முரண்பாடுகள் தோன்றின. பழைய அமைப்பிலிருந்த பண்டையச் சிறு தொழில்களும், நில உறவு முறைகளும் சிதைந்து சின்னுபின்னமாயின. விவசாயிகள் நிலத்தை இழந்து வேலைதேடி அலைந்தார்கள். வளர்ந்து வந்த புதிய முதலாளித்துவத்துடன் போட்டி போட முடியாத சிறு உற்பத்தியாளர்களும் கைத்தொழிலாளர்களும் தமது சொந்தத் தொழில்களை இழந்து நவீன தொழில் முதலாளிகளிடம் வேலை தேடி அலைந்தனர். இவ்வாறு வேலை தேடிப் பெற்றுக்கொண்டவர்களுக்கு வறுமையும், துன்பமும் தொடர்ந்து தொல்லைகளைக் கொடுத்துக்கொண்டேயிருந்தன. வேலை கிடைக்காத வர்களைத் துன்பம் துரத்தியடித்துடிக்கச் செய்தது. சுருங்கச் சொன்னுல் முதலாளித்துவத்தின் குணம்சம், அதனுடைய சுரண்டல் முறையும், ஆதிக்கமும் மேலே குறிப்பிட்ட முறையில் தொழிலாளர்களாக மாறிய முக்கிய நடுத்தர வர்க்கத்தையும் புதிதாகத் தோன்றிய நடுத்தர வர்க்கத்தையும் பெருமளவில் பாதித்தது. இக்காலத்தைச் சேர்ந்தவர்கள் நடைமுறை வாழ்வில் தோன்றியுள்ள சிக்கல்களைக் கண்டு பிரமித்தான். முதலாளித்துவ தீமைகளை ஒழித்துக்கட்ட, அவலிருந்து விடுபட சர்வரோக நிவாரணி ஒன்றைத் தேடி அலைந்தான். இதன் விளைவாக நடைமுறை வாழ்விலிருந்து கற்பனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினன். கனவுலகில் ஒரு புதிய உலகத்தை-மாந்தர் குலத்தை-சுந்தரமான வாழ்க்கை அமைப்பைச்-சிருஷ்டித்தான். இத்தகைய கனவுலக வாதிகளின்-நடுத்தர வர்க்கத்தின்-தத்துவ ஆசிரியர்களாகச் சிலர் தோன்றினர்கள். இவர்கள் பல சோஷலிஸத் தத்துவங்களைப் படைத்து உலாவ விட்டார்கள். இந்த சோஷலிஸத் தத்துவங்களுக்கும் இன்று பேசப்படும் ஜனநாயக சோஷலிஸம், சமாதான சோஷலிஸம் போன்றவற்றிற்கும் கருத்தொற்றுமை இருக்கின்றது.

ஏகாதிபத்தியவாதிகள் புத்தர்களல்ல!

"சமாதான சகஜீவன்' குருஷ்சேவ் பத்தர்கள், ஏகாதிபத்தியவாதிகளுடன் சகல பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துவிடலாம் என்று கூப்பாடு போட்டு வருகிறார்கள்.

வரலாற்றின் வளர்ச்சியை, மார்க்ஸிஸ—லெனினிஸத்தின் பிதாமகனை மார்க்ஸ் கூறும் போது, வர்க்கப் போராட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தினர்.

இதற்கு மாறுக, மார்க்ஸின் அடிப்படைக் கொள்கைக்கே விரோதமாகப் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் குருஷ்சேவ் கும்பல், இதுவரை சாதித்தது என்ன?

இதுவரை நடைபெற்றுள்ள ஆயுதப் பரிகரணம் சம்பந்தப்பட்ட கூட்டங்கள் மொத்தம்-665 ஆகும்.

இந்தக் கூட்டங்களில் வெளியிடப்பட்ட அறிக்கைகளில்உள்ளடங்கிய சொற்கள், மொத்தம்—ஒரு கோடி 90 லட்சமாகும்.

சோவியத் பிரதமர் இருமுறை அமெரிக்காவுக்கு சமாதானத் தூது சென்றார்.

ஜெர்மன் பிரச்சினையில் 23-க்கு அதிகமான சலுகைகள் அமெரிக்காவுக்குத் தரப்பட்டன.

ஜசன் ஹோவரும், கென்னடியும் உலக சமாதான ஏந்தல்களாகக் குருஷ்சேவினுல் வர்ணிக்கப்பட்டனர்.

"கியுபாவிலிருந்து நாங்கள் ஏவுகணைகளை வாபஸ் பெறக் காரணம், அமெரிக்கா

துருக்கியிலிருந்தும், இத்தாலியிலிருந்தும் தனது ஏவுகணைத்தளங்களை வாபஸ் பெறப் போவதாக வாக்குத் தந்துள்ளது" என்று சோவியத் அரசாங்கம் காரணம் கூறியது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அணுப் பரீட்சைத் தடை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

★

குருஷ்சேவின் இத்தனை "சமாதான" சாதனைகளுக்குப் பின், நடைபெற்றவைகள் என்ன?

1. 15 ஆயிரம் துருப்புக்களை அமெரிக்கா நாட்டோவுக்கு அனுப்பியது.

2. மேற்கு ஜெர்மனியில் ஏவுகணைத் தளம் அமைக்க அமெரிக்கா திட்டம் வகுத்துள்ளது.

3. கேடு கெட்ட முறையில் கிழக்கு ஜெர்மன் 'அவுட் டோபன்' விவகாரத்தில் ஈடுபட்டு, உலக யுத்தத்திற்கு வழிகோல முயன்றது.

4. துருக்கியிலிருந்து இதுவரை ஏவுகணைத்தளங்களை வாபஸ் பெறவில்லை.

5. சோவியத் நாட்டைச் சுற்றித் தனது தளங்களை அமெரிக்கா சக்திப் படுத்திக்கொண்டிருக்கிறது.

6. பல முதலாளித்துவ நாடுகளுக்கு ஏவுகணைகள் விற்று வருகிறது.

7. பூமிக்கு அடியில் அணுப் பரீட்சை கூடி வருகிறது.

8. கடந்த 4 ஆண்டுகளில் 40 நாடுகளுடன் அமெரிக்கா ராணுவ ஒப்பந்தம் உருவாக்கியுள்ளது.

9. பாஸிஸ ஜெர்மனிக்கு, கோடிக் கணக்கான டாலர்கள் தந்து உயிர் கொடுத்து வருகிறது.

10. கடந்த-15 ஆண்டுகளில் 888 கோடி டாலர்கள் யுத்த உதவி என்ற பெயரில் செலவிட்டிருக்கிறது, செவிட்டு வருகிறது.

11. 35 நாடுகளில், 250 மிகப் பெரிய யுத்த தளங்களையும். 700 சிறிய தளங்களையும் வைத்து உலக மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

12. ஜப்பானில், வியட்நாமில், கியுபாவில், வியட்நாமில், லத்தீன் அமெரிக்க நாடுகளில் தனது சதிகளை அதிகரித்து வருகிறது.

13. 1963-64-க்கு, 570,000 லட்சம் டாலர்கள் ராணுவ விஸ்தரிப்புக்குச் செலவிட அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

14. 7-வது கப்பற் படையை இந்து சமுத்திரத்திற்கு அனுப்பி ஆசியாவை அடக்கி ஒடுக்க முனைகிறது.

15. யூ. 2 விமானங்களை சோவியத் நாட்டிற்கு மேலும், சீனத்திற்கு மேலும் அக்கடி அனுப்பி, ஒற்றர் வேலை செய்கிறது.

இன்னும் இதுபோன்ற எத்தனையோ?

இத்தகைய நாசகாரக் கும்பலுடன்தான் சமாதான முறையில், சகஜீவனப் போக்கில் வர்க்க முரண்பாட்டைத் தீர்க்கத் துள்ளுகிறார்கள் திரிபுவாதிகள்'

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் புத்தர்களல்ல என்பதை மீண்டும் திரிபுவாதிகளுக்கு எச்சரிக்கிறோம்.

—ஊர்சுற்றி

கார்கில்ஸ் யூனியனின் போராட்ட வரலாறு

சி. டி. யூ. எப். தலைமையில் முன்னேற உறுதி



கொழும்பிலுள்ள மிகப் பெரிய வர்த்தக ஸ்தாபனமாகிய ''கார்கில்ஸ்'' தொழிலாளர்கள், 1944-ம் வருடம் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைமையிலுள்ள ''பொதுத் தொழிலாளர் சங்கத்தில்'' அணி திரண்டார்கள். 1944—1947 காலங்களில் நடைபெற்ற போராட்டங்களிலும், 6 தினங்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து கார்கில்ஸ் தொழிலாளர்கள் அன்றிருந்த 12.50 சம்பளத்தை அடிப்படைச் சம்பளம் 30/- வென்றெடுத்தார்கள். அத்தோடு,சேமலாப நிதியில் இடமும் பெற்றார்கள்.

இந்த நிலையில் 1947-ம் வருடம் யூ.என்.பி. ஆட்சிக்கு வந்ததும், தொழிற் சங்க உரிமைகள் நசுக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. எமது தொழிற் சங்கத்தை முதலாளிமார் சம்மேளனம் ஏற்றுக் கொள்ள மறுத்ததினால், தொழிற் சங்க அங்கீகாரத்திற்கான போராட்டத்தை மேற்கொள்ள நேர்ந்தது. இந்த நெருக்கடியான போது, போட்டித் தொழிற் சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளால் அமைக்கப்பட்டு, கார்கில்ஸ் தொழிலாளர் சங்கம் செயலற்று நிலை குலைந்தது.

எம். வி. கந்தையா
பொ. தொ. ச,
உதவி-செயலாளர்

1956-ம் வருடம் யூ.என்.பி. முறியடிக்கப்பட்டு, தொழிற் சங்கங்கள் மீண்டும் தங்களை வலுப்படுத்திக் கொண்ட போது கார்கில்ஸ் தொழிற் சங்கம் தன்னைப் புனருத்தாரணம் செய்து கொண்டது. இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைமையின் கீழ் திரண்டார்கள். 1959—1963 இந்த இடைப்பட்ட காலத்தில் பல வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. அதன் மூலம் சங்க அங்கீகாரம் பெற்ற தோடு, பழி வாங்குதலை எதிர்த்தும், 14 நாட்கள் மெடிக்கல் விடுமுறையும் வென்றெடுக்க முடிந்தது. பியூன்களுக்கு பதவி உயர்வும் பெற்றுக் கொடுக்க முடிந்தது.

கார்கில்ஸ் தையல் பகுதியில் தொழில் பார்த்த தையல் தொழிலாளர்களின் நலவுரிமைகளுக்காகவும் சங்கம் போராடியது. திடீரென தையல் பகுதியை மூடி தொழிலாளர்களை தெருவிலே நிர்வாகம் நிறுத்தியபோது, எமது சங்கம் அத் தொழிலாளர்களின் உரிமைப் போராட்டத்தை மேற் கொண்டது. தொழிலில் கோட்டில் நடவடிக்கை எடுத்து நஷ்ட ஈடு பெற்றுக் கொடுத்தது. இத் தொழிலாளர்களைப் பாதுகாத்தது. இந்தப் போராட்டங்களின் போது தோழர்கள்அல்பேடா, என்.பி. சில்வா, மர்தேலியஸ், ஸ்ரீதரன், அல்விஸ் ஆகிய தோழர்களின் பங்கு அளப்பரியது.

இன்று பொதுத் தொழிலாளர் சங்கத்தின் ஒரு உறுப்பாகவுள்ள கார்கில்ஸ் தொழிலாளர் சங்கம்,போராட்ட பாரம்பரியமிக்க சங்கமாகும். எமது சங்கம் என்றும் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் சரியான தலைமையால் வழி காட்டப்பட்டு வந்துள்ளது.

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் 16 - வது ஆண்டு விழாவின்போது எமது சங்கமும் பெருமையோடு கலந்து கொண்டது. அதே வேளையில் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் ஐக்கியத்தைக் குலைக்க,தொழிலாளர் அணியிலிருந்து தம்மை தனிமைப் படுத்திக் கொண்டுள்ள சில தலைவர்கள் முனைவது வேதனையையும்—ஆத்திரத்தையும் உண்டாக்குகிறது. இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் ரத்தத்திலும்—வெயர்வையிலும் — உழைப்பிலும் கட்டி வளர்த்து, தொழிலாளர் வர்க்கத்தின் உண்மைத் தலைவனாக வழிகாட்டும் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் போராட்டத்தில் புடம் போட்டெடுக்கப்பட்ட புகழ்மிகு ஸ்தாபனம். இந்த ஸ்தாபனத்தை சிறுமைத் தனம் கொண்ட சில தலைவர்கள் இனத்துவேஷம்—குலபேதம்—சதிகள் மூலம் பிளவுபடுத்த முனைந்தால், அவர்கள் நிச்சயமாக இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் கீழ் அணிதிரண்டுள்ள ஆயிரமாயிரம் தொழிலாளர்களால் துடைத்தெறியப்படுவர்.

அக்ரபத்தனை காளமலை மேல் கணக்குத் தோட்டத்தில்

நிர்வாகிகளின் காட்டுமிராண்டித்தனம்

''தலவாக்கொல்லைக் குச் சிறிது தூரத்திலுள்ள அக்ரபத்தனையைச் சேர்ந்த காளமலை மேல் கணக்கு என்னும் தோட்டத்தில்,இலங்கைத்தோட்டத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த செட்டி என்பவர் அரைக் காம்பராவை அதிகமாகப் பாவிக்கிறார் என்று கூறி தோட்ட நிர்வாகம் அவரை வேலை நீக்கம் செய்தது. உண்மையில் அந்த அரைக் காம்பராவும் அவருக்குக் கொடுக்கப்பட்டதொன்றே.

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்க தலவாக்கொல்லைக் கிளை இதுபற்றி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்த பொழுது, திடீரென்று சென்றமாதம்21-ந்தேதி செவ்வாய்க்கிழமை தோட்டநிர்வாகம்தோட்ட 'பாஸை' யும் அவரது வேலையாட்களையும் அனுப்பி காட்டு மிராண்டித் தனமாக செட்டி குடியிருந்த காம்பராக் கூரைத் தகரங்களைக் கழற்றியது. இந்த அக்கிரமச் செயலைக் கண்ட செங்கொடிச் சங்க தலவாக்கொல்லைக் கிளை அதைக் கண்டித்தும், கழற்றப்பட்ட தகரங்களைத் திருப்பிப் போடுமாறு கேட்டும் உடனடியாகத் தோட்டத் துரைக்கு தந்தியொன்றை அனுப்பி வைத்தது. தந்தி அனுப்பிய மறு கணமே அதனை ஊர்ஜிதம் பண்ணி கண்டனக் கடிதமொன்றையும் அனுப்பி வைத்தது. இத்துடன் நின்று விடவில்லை. அது, அட்டன் உதவித் தொழில் அதிபர், அக்ரபத்தனைப் பகுதிக்கான தோட்டத் துரைமார் சங்க தொழில் உதவி அதிகாரி, தோட்ட ஏஜென்ட் ஆகியோருக்கும் உடனடியாக மேற்படி தோட்டத் துரையின் அக்கிரமமானநடவடிக்கையை கண்டித்து, தந்திகளை அனுப்பிவைத்த அக்ரபத்தனை பொலிஸ் அதிகாரிக்கு இதுபற்றி அறிவித்து, துரை மீது வழக்குத் தொடர சகல நடவடிக்கைகளையும் எடுத்தது.

தோட்டத் தொழிலாளி ஒருவரின் காம்பராக் கூரையை கழற்றும் அளவுக்கு எல்லை மீறிய காட்டுமிராண்டித் தனமான தோட்டத் துரையொருவரின் செய்கையை தொழிற் சங்க வரலாறு இப்பொழுது தான் கண்டுள்ளது. இதைக் கண்டு செங்கொடிச் சங்கத் தலவாக்கொல்லைக் கிளை அதிர்ச்சியடைந்து வாளாவிருந்து விடவில்லை. இந்தக் காட்டுமிராண்டித் தனமான செய்கையை உடைத்தெறியும் முகமாகத் தனது சக்தி முழுவதையும் திரட்டி நடவடிக்கை எடுத்து வருகிறது.

அவர்கள் அனைவரும்அக்ரபத்தனையைச் சேர்ந்த கட்டமான் மோர்சான் என்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள். அவர்கள் அனைவரும் தலவாக்கொல்லை மாவட்ட செங்கொடிச் சங்க அங்கத்தினர்கள். அவர்கள் அனைவருக்கும் தோட்ட நிர்வாகம் வாரத்தில் 3நாட்கள் அல்லது 4 நாட்கள் வேலை மட்டுமே கொடுத்து வந்தது. அது மட்டுமல்ல, அவர்கள் அனைவருடைய புல்லுவெட்டு கொந்தரப்புக்கும் தோட்டக் கணக்கிலிருந்து திடீர் திடீரென்று ஆட்களைப் போட்டது. இன்னும் அவர்களுடைய வயல்களைச் சுத்தம் செய்தல், பிள்ளைக் காம்பிராவை திருத்தி அமைத்தல், இப்படிப் பட்ட பல பிரச்சினைகளை காதில் கூட போட்டுக்கொள்ளாமலிருந்தது. பொறுப்பார்களா தொழிலாளர்கள்? தங்களுடைய சங்கத்திலே (செங்கொடிச் சங்கத்திலே) முறையிட்டனர். செங்கொடிச் சங்கம் முறையாக நடவடிக்கைகள் எடுத்தது. முதலில் நிர்வாகத்துடன் கடிதப் போக்குவரத்து நடத்தியது. போதிய பயன் கிடைக்கவில்லை. பின்னர் சிநேக பூர்வமான பேச்சுவார்த்தைகள் நடத்தியது. அதனால் பயன் கிடைக்கவில்லை. எனவே,தொழிலாளர்கள் தங்களுடைய கடைசி ஆயுதமான வேலை நிறுத்த ஆயுதத்தைப் பாவித்தனர். இம்மாதத் தொடக்கத்தில் ஒரு வாரகாலம் சுமார் 250 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். விளைவு! துரை மறுபடியும் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டார். அதன்பின், வாரத்தில் 6 நாட்கள் வேலைதர ஒப்புக்கொண்டார் துரை. அது மட்டுமல்ல, புல்லு வெட்டுக் கொந்தரப்புக்கு திடீர் திடீரென்று தோட்டக் கணக்கு ஆட்களைப் போடுவதை நிறுத்தி விட்டு மாத முடிவில் கொந்தரக்குகளைப் பரிசோதித்து விட்டு, திருப்தியில்லையெனில் சம்பந்தப்பட்ட கொந்தரக்குக் காரர்களுக்கு அறிவித்து விட்டே ஆட்களைப் போடுவது என்று ஒத்துக் கொண்டார். மற்றும் பல பிரச்சினைகளையும் செய்து தருவதாகவும் ஒத்துக் கொண்டார் துரை.

காத்தான்குடி ஐக்கியத் தொழிலாளர் சங்கம்

திரிபுவாதத் தலைமைக்கு கண்டனம்

காத்தான்குடி ஐக்கிய தொழிலாளர் சங்கம், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்துடன் இணைக்கப் பட்டதையொட்டிய கூட்டம், காத்தான்குடி ஐக்கிய தொழிலாளர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

மரமறுக்கும் தொழிலாளர்களுடைய பிரச்சினையை முதலாளிமார்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு கன அடி அறுப்பதற்கு மூன்று சதம் கூட்ட வேண்டுமென்பது ஒரு முக்கிய வேண்டுகோள். அரசாங்கம் சி.டபிள்யு. ஈ. மூலம் (கூட்டுறவு ஸ்தாபனம்) மலிவு விற்பனை செய்வதாகப் பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்தும், காத்தான்குடி, ஆராயம்பதி, நாவற்குடா மக்கள் இதனை அனுபவிக்க முடியாதையொட்டி தோழர் கிருஷ்ணக்குட்டி அவர்களும் ஐக்கிய தொழிலாளர் சங்கத் தலைவர் நயினா மரைக்காயர் அவர்களும், உதவிக் கூட்டுறவு ஆணையாளரைச் சந்திக்க வேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தோழர்கள் சண்முகதாசன், பிரேமலால் குமாரசிறி போன்றவர்களைக் கட்சியிலிருந்து விலக்கியதை மிகவும் வன்மையாகக் கூட்டம் கண்டிக்கிறது.

மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை அதிகாரிகளின்

அட்டூழியம்

கடந்த பல ஆண்டுகளாக இவ் வைத்திய சாலைத் தொழிலாளர்களை நிர்வாகிகள் படு கீழ்த்தரமாகவும், அநியாயமாகவும் அடக்கி நசுக்கி வந்தார்கள். இந்த அநியாயங்களைத் தொடர்ந்து, மிஷன் என்ற முக மூடியை இவர்கள் பாவித்தார்கள்.

சென்ற ஆண்டில் இத்தொழிலாளர்கள் தமது உரிமைக்காகப் போராட சங்கம் அமைத்தனர். இச் சங்கம் சி. டி. யூ. மான தோட்டத் துரையொருவரின் செய்கையை தொழிற் சங்க வரலாறு இப்பொழுது தான் கண்டுள்ளது. இதைக் கண்டு செங்கொடிச் சங்கத் தலவாக்கொல்லைக் கிளை அதிர்ச்சியடைந்து வாளாவிருந்து விடவில்லை. இந்தக் காட்டுமிராண்டித் தனமான செய்கையை உடைத்தெறியும் முகமாகத் தனது சக்தி முழுவதையும் திரட்டி நடவடிக்கை எடுத்து வருகிறது.

அவர்கள் அனைவரும்அக்ரபத்தனையைச் சேர்ந்த கட்டமான் மோர்சான் என்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள். அவர்கள் அனைவரும் தலவாக்கொல்லை மாவட்ட செங்கொடிச் சங்க அங்கத்தினர்கள். அவர்கள் அனைவருக்கும் தோட்ட நிர்வாகம் வாரத்தில் 3நாட்கள் அல்லது 4 நாட்கள் வேலை மட்டுமே கொடுத்து வந்தது. அது மட்டுமல்ல, அவர்கள் அனைவருடைய புல்லுவெட்டு கொந்தரப்புக்கும் தோட்டக் கணக்கிலிருந்து திடீர் திடீரென்று ஆட்களைப் போட்டது. இன்னும் அவர்களுடைய வயல்களைச் சுத்தம் செய்தல், பிள்ளைக் காம்பிராவை திருத்தி அமைத்தல், இப்படிப் பட்ட பல பிரச்சினைகளை காதில் கூட போட்டுக்கொள்ளாமலிருந்தது. பொறுப்பார்களா தொழிலாளர்கள்? தங்களுடைய சங்கத்திலே (செங்கொடிச் சங்கத்திலே) முறையிட்டனர். செங்கொடிச் சங்கம் முறையாக நடவடிக்கைகள் எடுத்தது. முதலில் நிர்வாகத்துடன் கடிதப் போக்குவரத்து நடத்தியது. போதிய பயன் கிடைக்கவில்லை. பின்னர் சிநேக பூர்வமான பேச்சுவார்த்தைகள் நடத்தியது. அதனால் பயன் கிடைக்கவில்லை. எனவே,தொழிலாளர்கள் தங்களுடைய கடைசி ஆயுதமான வேலை நிறுத்த ஆயுதத்தைப் பாவித்தனர். இம்மாதத் தொடக்கத்தில் ஒரு வாரகாலம் சுமார் 250 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். விளைவு! துரை மறுபடியும் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டார். அதன்பின், வாரத்தில் 6 நாட்கள் வேலைதர ஒப்புக்கொண்டார் துரை. அது மட்டுமல்ல, புல்லு வெட்டுக் கொந்தரப்புக்கு திடீர் திடீரென்று தோட்டக் கணக்கு ஆட்களைப் போடுவதை நிறுத்தி விட்டு மாத முடிவில் கொந்தரக்குகளைப் பரிசோதித்து விட்டு, திருப்தியில்லையெனில் சம்பந்தப்பட்ட கொந்தரக்குக் காரர்களுக்கு அறிவித்து விட்டே ஆட்களைப் போடுவது என்று ஒத்துக் கொண்டார். மற்றும் பல பிரச்சினைகளையும் செய்து தருவதாகவும் ஒத்துக் கொண்டார் துரை.

இதன் பின் சங்கம் துரிதமாக வேலை செய்ய ஆரம்பித்ததுடன், நிர்வாகிக்கு எதிராகவும் போராட ஆரம்பித்தது. இதைப் பொறுக்காத நிர்வாகிகள் சங்கத்தை முறியடிக்கப் பகீரதப் பிரயத்தனங்கள் எடுத்தனர்.

ஆனால், தோழர் சண்முகதாசனின் உதவியால் நிர்வாகிகளின் சூழ்ச்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டன.

தமது சூழ்ச்சிகள் அனைத்திலும் தோல்வி கண்ட நிர்வாகிகள், இப்பொது நேரடியாகப் போராடினர்கள். சங்கத் தலைவர், காரியதரிசி ஆகிய இருவரையும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்தது இதிலொன்றாகும்.

இது சம்பந்தமாக சி.டி.யூ. எப். துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. தொழிலாளர்களின் ஐக்கியம் நிர்வாகிகளைக் கதிகலங்கச் செய்துள்ளது.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளி

"வெற்றி அல்லது வீர மரணம்"

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் 16-வது மாநாட்டில் பங்கு பற்றுவதற்காக உங்கள் நாட்டிற்கு வரக்கிடைத்தமைக்கு நாம் மிகவும் சந்தோஷமடைகிறோம். இந்நேரத்தில் உங்களால் ஒழுங்கு செய்யப்பட்ட தென் வியட்நாம் தொழிலாளர் சர்வதேச ஒற்றுமைத் தின சந்தர்ப்பத்தில் பேசக் கிடைத்தமைக்கு நாம் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். வியட்நாம் தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பிலும், வியட்நாம் தொழிலாளர்களின் சார்பிலும் உங்களுக்கு, உங்கள் மாநாட்டின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவிக்க அனுமதி தாருங்கள்.

வியட்நாம் தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பிலும், தொழிலாளர், பொதுமக்களின் சார்பிலும் இ.தொ.ச.ச-வுக்கும், இலங்கைவாழ் பொதுமக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் எங்கள் நன்றியறிதலைத் தெரிவிக்க அனுமதிதாருங்கள்.

இ.தொ.ச.ச. மாநாட்டுக்கு வந்து பங்குபற்றுவதைப் பெரும் பேறாகக் கருதுகிறோம். இதன் மூலம் உங்கள் அழகிய நாட்டுடன், வீரமிக்க இலங்கை தொழிலாளி வர்க்கத்துடன் நட்புறவும், நேச உணர்வும் மிக்க இலங்கைவாழ் மக்களுடனும் தொடர்புகொள்ள, உறவாட சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்நேரத்தில் உங்கள் போராட்ட அனுபவங்களைத் தெரிந்துகொள்வதோடு வியட்நாம் தொழிற்சங்க சம்மேளனமும். வியட்நாம் பொதுமக்களும் தொழிலாளர்களும் உங்களுடைய போராட்டங்களுக்கு பூரண ஆதரவளிப்பார்கள் என உறுதி கூறுகிறேன்.

அன்புமிக்க தோழர்களே,

நீண்ட நெடுங்காலமான, ஆழ்ந்த,வெற்றிகரமான வியட்நாம் மக்களின் போராட்டம் டியன்-பியன்-பூவில், எங்களது தொழிலாளர்களும், மக்களும் நடத்திய வெற்றிகரமான யுத்தத்தின் மூலமும், கேவலமான முறையில் வியட்நாமில் ஆக்கிரமிப்பு நடத்திய பிரஞ்சுக் காலனி ஆதிக்க வெறியர்களையும், அமெரிக்க தலையீட்டையும் முறியடித்து, வியட்நாம் சுதந்திரத்தைத்,சுயாதீனத்தை எல்லைப் பாதுகாப்பை ஐக்கியத்தை ஏற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

அன்றிலிருந்து வட வியட்நாம் சம்பூரணமாக விடுதலையாக்கப்பட்டு, இன்று எங்கள் தொழிலாளர்களும் மக்களும் உள்ளக் களிப்புடன் சோஷலிஸத்தை கட்டிவளர்த்து வருகிறார்கள். எங்களுடைய ஞான திருஷ்டிமிக்க வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் தலைமையிலும், பிரான்சு காலனி ஆதிக்கம் விட்டுச் சென்ற மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து எங்களுடைய மக்களும் தொழிலாளர்களும் கடந்த 9 வருடங்களிலும் படிப்படியாக எல்லாக் கஷ்டங்களையும் தாண்டி, தொழிலாளர் வர்க்கம் விவசாய உற்பத்தியைப் பெருக்கி நவீன கைத்தொழில் உற்பத்திக்கு அடித்தளம் அமைத்துள்ளது.

எங்கள் அருமை நாட்டின் சரிபாகமான தென் வியட்நாமில் ஏகாதிபத்திய பிற்போக்குக் கும்பலின் ஆதிக்கம் இன்னும் நிலவுகின்றது. 1954-ம் ஆண்டு ஜெனிவா ஒப்பந்தத்தை அமெரிக்க ஏகாதிபத்தியம் தான்தோன்றித் தனமாக மீறியுள்ளது. தான்தோன்றித்தனமாக வியட்நாமைப் பிரித்து, தென் வியட்நாம் தொழிலாளர்கட்கும், பொதுமக்களுக்கும் எதிராக அறவிடமுடியாத ஆக்கிரமிப்பை நடத்திவருகின்றது. தென் வியட்நாமை அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதோடல்லாமல், இந்த யுத்தத்தில் பெறும் அனுபவத்தின் மூலம் ஏனைய நாடுகளிலும் தங்களுடைய ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்த எண்ணியுள்ளனர்.

25,000 அமெரிக்க ராணுவ உத்தியோகத்தரும் ராணுவத்தினரும், 50,000 உள்நாட்டு கூலிப்படைகளின் ஒத்துழைப்புடன், நவீன ஆயுதங்களுடன் அமெரிக்காவில் செய்யப்பட்ட விமானங்களுடன், கொடூரமான யுத்தத்தை நடத்தி தென் வியட்நாமிலுள்ள எங்களுடைய அருமைச் சகோதர சகோதரிகளை, உற்றாரை உறவினரை ஈவிரக்கமற்ற முறையில் கொல்கின்றனர், கொடுமைப்படுத்துகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர் கூட்டம் வாயளவில் நாகரீகத்தைப் பற்றி, சுதந்திரத்தைப் பற்றி,சமாதானத்தைப்பற்றி, ஜனநாயகத்தைப் பற்றிப்பேசுகின்றனர். ஆனால் உண்மையில் துக்கத்திலும், துன்பத்திலும் உழலுகின்ற எம்மக்களுக்கு எண்ணற்ற கொடுமைகளை இழைத்து வருகிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திவரும் கொடூரமான கொடுமைகள் தென்வியட்நாம் பௌத்த மக்கள் மத்தியிலும் கூட கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஒன்பது வருடங்களில் ஏழு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். இழைக்கப்பட்ட அநீதிகளின் காரணமாக, கொடுமைகளின் காரணமாக ஆறு லட்சத்து எழுபத்திரெண்டாயிரம் பேர் செயலாற்ற முடியாதவர்களாக்கப்பட்டுள்ளனர். ஆயிரம் சிறைகளில் மூன்று லட்சத்து எழுபதினாயிரம் பேர் சிறை வைக்கப்பட்டுள்ளனர். மற்றும் நூற்றுயிரக்கணக்கான மக்கள் காவல் முகாம் போன்ற வைகளிலும், கடுமையான கண்காணிப்பின் கீழும் வைக்கப்பட்டுள்ளனர். சுதந்திரத்துக்காக, அதை உறுதிப்படுத்துவதற்காகப் போராடிக்கொண்டிருக்கக் கூடிய மக்களின் எதிரி அமெரிக்க ஏகாதிபத்தியம். வியட்நாம் மக்களின் முதல் முக்கிய எதிரி அமெரிக்க ஏகாதிபத்தியம்.

தாய் நாட்டின் நன்மைக்காக இறுதிவரை போராட வேண்டும் என்ற தென் வியட்நாம் மக்களின் அவாவினால் எழுந்துள்ள தென் வியட்நாம் தேசிய விடுதலை முன்னணி, தென் வியட்நாம் மக்கள் பெற்ற பெரும் சாதனையாகும். பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள மக்கள் 1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் திகதி ஒன்றுகூடி இவ்வணியை அமைத்தனர். இவ்வணியில் முக்கிய அங்கம் வகிக்கக்கூடிய தென் வியட்நாம் தொழிலாளர் விடுதலைச் சங்கம், தென் வியட்நாம் தொழிலாளர் வர்க்கத்தின் பரந்த அணியாகும். தென் வியட்நாம் தேசிய விடுதலை முன்னணியின் தலைமையில் தென் வியட்நாம் தொழிலாளர்களும், பொதுமக்களும் வீரமிக்க போராட்டம் நடத்திஞர்கள், நடத்திவருகின்றார்கள். அதன்மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் கூலி நாய்களுக்கும் பெரும் அடியைக்கொடுத்து வருகின்றார்கள். கடந்த மூன்று வருடத்துக்குள் 800 அமெரிக்க ராணுவத்தினர் உட்பட ஒரு லட்சத்து எழுபதினாயிரம் எதிரிப்படைகளை அவர்கள் செயலிழக்கச் செய்துள்ளார்கள். கடந்த இரண்டு வருடத்துக்குள் எதிரியினுடைய 450 காவல் தளங்களை நாசப்படுத்தியுள்ளனர். 700 விமானங்களையும், 900 போக்குவரத்துச் சாதனங்களையும், 450 யுத்தக் கப்பல்களையும், படகுகளையும் தாக்கி நாசப்படுத்தியுள்ளார்கள். 69 ராணுவ புகையிரதங்களை புரட்டியுள்ளார்கள். இந்த வருடத்தின் முதல் 9 மாதங்களில் 4,700 காவல் முகாம்களை நாசப்படுத்தியுள்ளனர். 32,000 அமெரிக்க கைப்பொம்மை ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் மக்களுடைய பக்கத்துக்கு மாறியுள்ளார்கள். மூன்றில் இரண்டுபகுதி தென் வியட்நாம் நிலப்பரப்பும், மக்கள் தொகையில் சரிபாதியும் இன்று விடுதலையாக்கப்பட்டுள்ளது. விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் மக்களே தங்கள் எஜமானர்களாய் ஒரு புதிய வாழ்வினை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜனநாயக மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதோடு எந்தவித தாக்குதலையும் முறியடிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

"எங்களின் முக்கிய முதல் எதிரி அமெரிக்க ஏகாதிபத்தியமே"

இலங்கை தொழிலாளி வர்க்கத்தின், பொதுமக்களின் போராட்டத்தைப்பொறுத்தவரையில் உங்களது 16-வது மாநாடு மிகவும் முக்கிய பாத்திரத்தை வகிக்கிறது, உங்களுடைய 21 கோரிக்கைகளைப் பார்க்குமிடத்து நீங்கள் உங்கள் ஐக்கியத்தை சக்திப்படுத்தி, சகல பகுதியினரையும் ஒன்றுதிரட்டி, பொதுவான கோரிக்கையின் அடிப்படையில் போராட தயாராகிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது தெரியக்கிடக்கிறது. உங்களுடைய இம்மாநாடு 2,000,000 தொழிலாளர்களின், ஊழியர்களின் ஒற்றுமையை சக்திப்படுத்தி, தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியின் செயலை மேலும் துரிதப்படுத்தும் என்பது உறுதி.

தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமைக் கொடியை மேலும் உயர்த்துவதிலும், இலங்கை மக்களுடைய அரசியல் சமூக அமைப்பிலும் இ. தொ. ச. ச. உயர்ந்த பாத்திரத்தை வகிப்பதைக் காண நாம் பெரிதும் சந்தோஷமடைகிறோம்.தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கொள்கைக் கொடியினை உயர்த்திப்பிடிப்பதிலும், ஐக்கியமும் போராட்டமும் என்ற இலங்கை தொழிலாளி வர்க்கத்தின் கொள்கைகளை உயர்த்திப் பிடிப்பதிலும் இ.தொ.ச. முன்நிற்கிறது. தோழர் என். சண்முகதாஸன் உங்கள் மாநாட்டிற்கு சமர்ப்பித்த அறிக்கையில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. புரட்சிகர வேலைகளை துரிதப்படுத்தக் கூடிய அளவுக்குபரந்த தொழிலாளர்களையும், ஊழியர்களையும் ஒற்றுமைப்படுத்த இது தளம் அமைக்கும் என நாம் கருதுகிறோம்.

வியட்நாம் பிரதிநிதியின் நெஞ்சை உருக்கும் சொற்பொழிவு

உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஒருமுக்கியமான காலகட்டத்தில் உங்கள் மாநாடு நடைபெறுகின்றது. ஏகாதிபத்தியத்துக்கு, காலனி, நவீன காலனி ஆதிக்கத்துக்கு எதிராக, சமாதானத்துக்கு, தேசவிடுதலைக்கு, சோஷலிஸதிற்கு ஆதரவாகப் போராடக்கூடிய மக்களுக்கு,தொழிலாளர்கட்கு சாதகமானதாக இன்றைய சர்வதேசிய நிலைமையுள்ளது. உங்கள் தேசிய விடுதலையை உறுதிப்படுத்த, ஆசிய, உலக சமாதானத்தைப் பாதுகாக்க, தொழிலாளர் வர்க்கத்தின் நன்மைகளை பெற்றெடுக்கக் கூடிய முறையில் இலங்கை தொழிற் சங்க ஒற்றுமை ஒரு புதிய உச்சக்கட்டத்தை அடைவதற்கு இந்த நாட்டுத் தொழிற்சங்ககத்தை தலைமை தாங்கி நடத்துவதற்கு உங்கள் மாநாடு வழிவகுக்கும் என நாம் திடமாக நம்புகிறோம்.

கொடிய யுத்த எமெ

சகல கொரிய மக்களினதும், கொரியத் தொழிலாளர்களினதும் மனமுவந்த நல்லாசிகளை இம்மாநாட்டின் மூலம் இலங்கை தொழிலாளர் கட்கும், மக்களுக்கும் தெரிவிக்கின்றேன்.

உங்களது சம்மேளனமும், இலங்கைத் தொழிலாளி வர்க்கமும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான, காலனி ஆதிக்கத்திற்கு

எதிரான
தேசிய விடு
முனேற்றத்
களிலும், ந
திற்கெதிரா
லும், இலங்
வர்க்கத்தின்
போராட்ட
றுள்ள
யாகக் க
நான் மகி
இலங்கை
கமும், மக்
ஏகாதிபத்தி
ஆட்சியின்
சுரண்டலை
தையும் ப
வித்துள்ளன
இருந்த
வுள்ள ஊ
மக்கள் எ

களையும்
ஏகாதிபத்தி
ராகப் போ
தலையை

சுதந்திர
கைத் தொ
மக்களும் நி
ஆட்சியின்
அமெரிக்க
சூழ்ச்சி மி
யும் தமது
களில் எதி
பல குறிப்பி
களை ஈட்டி
சுதந்திரத்
தையும் பா
வெற்றிகள்

பிரித்தா
வாதிகளின்

கொ

நாட்டிலிருந்
வதிலும், வி
தை தேசிய
இலங்கைத்
கம் திடமா
டுள்ளது.

குறிப்பாக
இலங்கைத்
மேளனமும்,
லாளி வர்க்
மூலதனத்தி
கொம்பனிக
மாக்குவதற்
போராட்ட
ளன.

தொழிலா
நலன்களுக்க
வேலை வசதி
றத்திற்காக
தொழிற்சங்
வீரமிக்க, தி
டங்கள் நட

திகளின் சொற்பொழிவுகள்

ய யுத்தத்தின் கொள்ளைத் தலைவன் அமெரிக்க ஏகாதிபத்தியமே

எதிரான போராட்டத்திலும், தேசிய விடுத்தலைக்கான, சமூக முனேற்றத்துக்கான முயற்சிகளிலும், நவீன திரிபுவாதத்திற்கெதிரான போராட்டத்திலும், இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்திற்கான போராட்டத்திலும் பெற்றுள்ள வெற்றிகளை நேரடியாகக் கண்டு கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கை தொழிலாளி வர்க்கமும், மக்களும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காலனி ஆட்சியின் கீழ், கொடூரமான சுரண்டலையும் அடிமைத் தனத்தையும் பலகாலமாக அனுபவித்துள்ளனர்.

இருந்த போதிலும், துணிவுள்ள ஊக்கமுள்ள இலங்கை மக்கள் எல்லாவித நெருக்கடிகளையும் எதிர்த்து, விதேசிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராகப் போராடி தேசிய விடுதலையை பெற்றுள்ளனர்.

சுதந்திரத்திற்குப் பின் இலங்கைத் தொழிலாளி வர்க்கமும், மக்களும் நீண்டகால காலனி ஆட்சியின் கொடுமைகளையும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சி மிகுந்த தலையீடுகளையும் தமது தேசியப் பிரச்சினைகளில் எதிர்த்துப் போராடி பல குறிப்பிட்டத்தக்க வெற்றிகளை ஈட்டியுள்ளனர். தமது சுதந்திரத்தையும், சுயாதீனத்தையும் பாதுகாப்பதிலும் பல வெற்றிகள் கண்டுள்ளனர்.

பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் யுத்த தளங்களை நாட்டின் சுதந்திர வளர்ச்சிக்காகவும், சமூக, வர்க்க விடுதலைக்காகவும், ஏகாதிபத்திய வாதிகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், இலங்கை தொழிலாளி வர்க்கம் நடத்திவரும் போராட்டங்களை கொரிய தொழிலாளி வர்க்கம் பூரணமாக ஆதரித்துள்ளது, ஆதரித்தும் வருகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு முயற்சிகளுக்கெதிராகவும், உள்நாட்டு விவகாரங்களின் தலையீடுகளுக்கெதிராகவும், தேசிய சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவும், தனித்தியங்கக்கூடிய தேசிய பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பதற்காகவும், உழைக்கும் மக்களின் இறுதி வெற்றிக்காகவும், இலங்கை தொழிலாளி வர்க்கமும், சம மேளனமும் நடத்திவரும் போராட்டங்கள் மென்மேலும் வெற்றி காணட்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

அன்புத் தோழர்களே,

கொரிய மக்கள் தமது மதிப்பிற்குரிய அன்புத் தலைவர் தோழர் கிம் இல் சுங்கின் தலைமையிலுள்ள கொரிய தொழிலாளர் கட்சியின் தவறற்ற தலைமையினால் சோஷலிஸ புரட்சியிலும், சோஷலிஸ வளர்ச்சியிலும் ஏராளமான சாதனைகளை நிறைவேற்றியுள்ளனர்.

தன்னம்பிக்கையுள்ள புரட்சிகர உணர்ச்சிகொண்ட கொரிய தொழிலாளி வர்க்கமும், மக்களும் யுத்தத்திற்குப்பின் மிகக் குறுகிய காலத்தில் யுத்தத்தினால் ஏற்பட்ட நஷ்டங்களை நிவர்த்திசெய்து, தேசிய பொருளாதாரத்தை மறுபடியும் கட்டிவளர்த்து தமது தாயகத்தை தனித்தியங்கக் கூடிய தேசிய பொருளாதாரத்தை அத்திவாரமாகக் கொண்ட ஒரு சோஷலிஸ தொழில்-விவசாய நாடாகமாற்றியுள்ளனர். இன்று எமக்குத் தேவையான இயந்திரங்கள், டிராக்டர்கள் போன்ற தேசிய பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையானவற்றையும் மக்களின் உடனடித் தேவைகளான உணவு உடை போன்றவைகளையும் அடிப்படையாக நாமே உற்பத்தி செய்கின்றோம்.

தென் கொரிய, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் 18 வருட ராணுவ ஆட்சியின் காரணமாக பட்டினியிலும் வறுமையிலும், கொள்ளையிலும், கொலையிலும் ஆழ்ந்து கிடக்கும் நரகமாக ஆக்கப்பட்டுள்ளது. இன்று தென் கொரியாவில் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் 60 லட்சம் மக்கள் வீதிகளிலே திரிகின்றனர். வாழும் உரிமைகளுக்காகவும், அரசியல் விடுதலைக்காகவும் நாட்டின் சமாதான ஒருமைப்பாட்டிற்காகவும் குரல் கொடுக்கும் தென் கொரியத் தொழிலாளர்களும் மக்களும் மிருகங்களிலும் கேவலமாக அடக்கி ஒடுக்கப் படுகின்றனர்.

தென் கொரிய மக்களினது துரதிருஷ்டங்களுக்கும் கஷ்டங்களுக்கும் எமது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு முட்டுக் கட்டையாக உள்ள மூலகாரணம் அமெரிக்க ஏகாதிபத்தியத் துருப்புக்கள் தென் கொரிய மண்ணில் இருப்பதுதான்.

கொரிய தொழிலாள வர்க்கமும், மக்களும் நாடு முழுவதிலும் பரவலான போராட்டங்கள்நடத்தி அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களை தமது மண்ணிலிருந்து துடைத்தெறிவார்கள். தமது நாட்டின் ஒருமைப்பாட்டை நிச்சயம் ஏற்படுத்துவார்கள்.

அன்புத் தோழர்களே!

சர்வதேசிய ரீதியில் சமாதான சோஷலிஸ சக்திகள் ஏகாதிபத்திய யுத்த சக்திகளிலும் பார்க்க பலம் பொருந்தியதாக உள்ளன.

சமாதானம் என்னும் போலிப் போர் வையில் ஒழிந்து கொண்டு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தமது ஆயுத விஸ்தரிப்பு முயற்சிகளை உக்கிரப்படுத்தி, விரிவுபடுத்தி தம்மாலானவற்றையெல்லாம் செய்துகொண்டு, யுத்தத்திற்குத் தயார் செய்துகொண்டு, ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்களை நசுக்கும் முயற்சியில் மென்மேலும்தீவிரமாக ஈடுபடுகின்றனர்.

ஏகாதிபத்தியவாதிகளும், காலனி ஆதிக்கவாதிகளும், உதவி என்ற போர்வையின் பேரில் புதிதாக விடுதலை பெற்ற நாடுகளை அரசியல் ரீதியாகவும், பொருளார ரீதியாகவும் அடிமைப்படுத்த முயல்கின்றனர். இதிலிருந்து எமக்குத் தெளிவாகத் தெரிகிறது, ஆக்கிரமிப்புக்கும் யுத்தத்திற்கும தலைவன் அமெரிக்க ஏகாதிபத்தியமே. உலகப் பிற்போக்குக் கும்பலின் கொள்ளைத் தலைவன் அமெரிக்க ஏகாதிபத்தியமே.

ஏகாதிபத்தியவாதிகளின் யுத்த உபாயங்களைப் பற்றி நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்களின் ஆக்கிரமிப்பு முயற்சிகளை நாம் தொடர்ந்து தவிடு பொடியாக்க வேண்டும். முதலாளித்துவ நாடுகளின் சமமற்ற அபிவிருத்தி முன்னெப்போதையும் விட மோசமாக உள்ளது. ஏகாதிபத்தியவாதிகளின் ஆதிக்கப் பரப்பு மேலும் மேலும் சுருங்கியுள்ளது. இதனால், அவை ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியம் நெடுகிலும் பிரிட்டிஷ், பிரெஞ்சு மற்றும் பிற ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சந்தைகளையும் செல்வாக்குப் பிரதேசங்களையும் பறித்துக்கொள்கின்றது. அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள் பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதபலத்தைப் பெருக்கியும், யுத்தத் தயாரிப்புகள் செய்தும் வந்துள்ளன. இரண்டாம் உலக யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட மேற்கு ஜெர்மனியை ஜப்பானிய ராணுவ வெறி அனது முந்திய எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் மீண்டும் தலை தூக்கியுள்ளன. இவ்விரு நாடுகளினதும், ஏகாதிபத்தியவாதிகள் வெளிப்பட்டு முதலாளித்துவ உலக சந்தைக்கான வலுப் போட்டியில் சேர்ந்துகொண்டுள்ளனர். இப்போது மீண்டும் தாங்கள் ''பாராம்பர்ய நட்பைப்'' பற்றிப் பேசுகின்றனர். ''ஆரம்ப ஸ்தானமாக வாஷிங்டனுடன் ஒரு பொன்-டோகியோ அச்சு'' என அழைக்கப் படுவதற்காகப் புதிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். மேற்கு ஜெர்மனிய ஏகாதிபத்தியம் விதேச ராணுவ தளங்களுக்காக மமதையுடன் சுற்றித் தேடுகிறது. இது ஏகாதிபத்தியத்தினுள்ளே உள்ள கடும் மோதல்களை மோசமாக்குகிறது. அதே நேரத்தில் சோஷலிஸ முகாமுக்கும் எல்லா சமாதானம் விரும்பும் நாடுகளுக்கும் உள்ள பயமுறுத்தலைக் கூட்டுகிறது. முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் ஜெர்மன் ராணுவவெறிக்கு புத்துயிர்பெற ஊட்டம் தந்தனர். தற்போதைய நிலைமை பெரிதும் அதைப் போன்றதே.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திலேயே சமாதானம் காண முடியும்

கொரியப் பிரதிநிதியின் வீர முழக்கம்

நாட்டிலிருந்து வெளியேற்றுவதிலும், விதேசிய மூலதனத்தை தேசியமயமாக்குவதிலும் இலங்கைத் தொழிலாளி வர்க்கம் திடமாகப் பங்கு கொண்டுள்ளது.

குறிப்பாக, இந்த வருடம் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனமும், இலங்கை தொழிலாளி வர்க்கமும் அமெரிக்க மூலதனத்தின் எண்ணெய்க் கொம்பனிகளைத் தேசியமயமாக்குவதற்காக வெகுஜனப் போராட்டங்கள் நடத்தியுள்ளன.

தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்காகவும் வாழ்க்கை, வேலை வசதிகளின் முன்னேற்றத்திற்காகவும் இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் வீரமிக்க, திடமான போராட்டங்கள் நடத்தியுள்ளது.

எமது இருநாட்டு மக்களும் பல காலமாக ஏகாதிபத்திய காலனி ஆதிக்கங்களினால் நசுக்கப்பட்டு, கேவலமாக நடத்தப்பட்டு, தேசிய விடுதலைக்காக தீவிரமாகப் போராடியுள்ளோம்.

இறுதியாக இலங்கை தொழிலாளி வர்க்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலுள்ள உலக பிற்போக்குவாதிகளின் எல்லா முயற்சிகளையும் தவிடுபொடி ஆக்குவர் என்று தமது தேசிய சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் என்றும் எனது திடமான நம்பிக்கையை நான் கூறுகிறேன். அதே வேளையில், இலங்கை தொழிலாளி வர்க்கம் நவீன திரபுவாதிகளுக்கெதிராகப் போராடும் மார்க்சிஸ - லெனினிஸத்தின் புனிதத்தன்மையைப் பாதுகாக்கும். தமது ஐக்கியத்திலும், உறுதியிலும், இந்த நாட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் சரித்திரக் கடமையைப் பூர்த்தி செய்வர் என்பது எனது திடமான நம்பிக்கை. உங்களை எதிர்நோக்கும் போராட்டங்களில் மாபெரும் வெற்றிகள் கிட்டட்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

பகுதி 5

லெனினிஸம் நீடு வாழி!

முதலாளித்துவ நாடுகளின் சமமற்ற அபிவிருத்தி முன்னெப்போதையும் விட மோசமாக உள்ளது. ஏகாதிபத்தியவாதிகளின் ஆதிக்கப் பரப்பு மேலும் மேலும் சுருங்கியுள்ளது. இதனால், அவை ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியம் நெடுகிலும் பிரிட்டிஷ், பிரெஞ்சு மற்றும் பிற ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சந்தைகளையும் செல்வாக்குப் பிரதேசங்களையும் பறித்துக்கொள்கின்றது. அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள் பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதபலத்தைப் பெருக்கியும், யுத்தத் தயாரிப்புகள் செய்தும் வந்துள்ளன. இரண்டாம் உலக யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட மேற்கு ஜெர்மனியை ஜப்பானிய ராணுவ வெறி அனது முந்திய எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் மீண்டும் தலை தூக்கியுள்ளன. இவ்விரு நாடுகளினதும், ஏகாதிபத்தியவாதிகள் வெளிப்பட்டு முதலாளித்துவ உலக சந்தைக்கான வலுப் போட்டியில் சேர்ந்துகொண்டுள்ளனர். இப்போது மீண்டும் தாங்கள் ''பாராம்பர்ய நட்பைப்'' பற்றிப் பேசுகின்றனர். ''ஆரம்ப ஸ்தானமாக வாஷிங்டனுடன் ஒரு பொன்-டோகியோ அச்சு'' என அழைக்கப் படுவதற்காகப் புதிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். மேற்கு ஜெர்மனிய ஏகாதிபத்தியம் விதேச ராணுவ தளங்களுக்காக மமதையுடன் சுற்றித் தேடுகிறது. இது ஏகாதிபத்தியத்தினுள்ளே உள்ள கடும் மோதல்களை மோசமாக்குகிறது. அதே நேரத்தில் சோஷலிஸ முகாமுக்கும் எல்லா சமாதானம் விரும்பும் நாடுகளுக்கும் உள்ள பயமுறுத்தலைக் கூட்டுகிறது. முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் ஜெர்மன் ராணுவவெறிக்கு புத்துயிர்பெற ஊட்டம் தந்தனர். தற்போதைய நிலைமை பெரிதும் அதைப் போன்றதே.

இதன் விளைவும் மீண்டும் அவர்கள் ''கல்லைப் பொறுக்கி எடுத்து, தங்கள் காலில் போட்டுக் கொள்வதாய்த்தான்'' இருக்கும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உலக நெருக்கடியை சிருஷ்டித்து வருகின்றனர். இது அவர்களது பலத்தின் அறிகுறியல்ல, பலவீனத்தின் அறிகுறியே. இது முதலாளித்துவ அமைப்பின் முன்காண தஸ்திரமின்மையைப் பிரதிபலிக்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் தங்கள் உலக ஆதிக்க அவாவை நிறை வேற்றிக் கொள்ள விளைகின்றனர். இதற்காக அவர்கள் சோஷலிஸ நாடுகளுக்கு எதிரான நாசகார, சதிவேலைகள் செய்வதோடு நின்றுவிடுவதில்லை. பல்வேறு நாடுகளில் புரட்சியை அடக்கும் உலக கூலிப்பட்டாள வேலையைத் தமக்கு நியமித்துக் கொண்டுள்ளனர். இதில் அவர்கள் ''கம்யூனிஸ ஆபத்தை'' எதிர்க்கும் சாட்டில் தங்கள் ராணுவ தளங்களை உலகைச் சுற்றி ஸ்தாபிக்கின்றனர்; இடைப்பட்ட பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டு ராணுவ தூண்டுதல்கள் செய்கின்றனர். அனேவரும் 'கல்லாலடி, கல்லாலடி' எனக் கத்தப் பாதைக்குக் குறுக்கே ஓடும் எலியின் நிலையைப் போன்றது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் நிலை. அவர்கள் எங்கும் இடிபட்டு முட்டுப்பட்டு ஓடி அலைகின்றனர். தாங்கள் நினைத்ததற்கு மாறுக எங்கும் மக்களின் புரட்சிகரப் போராட்டங்களின் புதிய எழுச்சியைத் தூண்டி விடுகின்றனர், சோவியத் யூனியனின் தலைமையிலான சோஷலிஸ உலகின் வளரும் சந்துஷ்டிக்கு எதிர் உவமையாக, ''உலக வல்லரசு என்ற ரீதியில் அமெரிக்காவின் செல்வாக்குக் குறைகிறது.'' என்பதை அவர்களே இப்பொழுது உணர்ந்து வருகின்றனர். அவர்களில் ஒருவர் 'புராதன ரோமாபுரியின் தாழ்வையும் வீழ்ச்சியையும் மட்டுமே காண முடியும்.''

காலைப் பொழுது!

மக்கள் மன்றத்தின் மத்தியில் உள்ள அறையில், தம் கடமையில் சோம்பி, தலைவர்கள் சரிந்து கிடந்தனர்.

நகரத்தில் தொழிலாளர்கள் தமது சீவியப் பிரச்சினைகளை முகத்தில் தூங்கவிட்டிருந்தாலும், சுறுசுறுப்பாகத் தம் தம் தொழிற்சாலைகளுக்குப்போய்க்கொண்டிருந்தனர்.

அந்தத் தொழிலாளரின் பிரச்சினைகளையே தலையாகக் கொண்ட, தோழன், யோசனையோடு அந்த அறைக்கு வந்தான்.

அவர்களில் இவனும் ஒருவன்தான்.

அவன் தன் கடமையைச் செய்த களைப்பில் வெறுமையாகக் கிடந்த ஈஸிச்சேரில் சாய்ந்து பத்திரிகையைப் படிக்கத் தொடங்கினன்.

அவன் சிந்தனை ஆத்திரம் கொண்டது!

''நாம் பொறுப்பு மிக்க தலைவர்கள்!''

நிமிர்ந்திருந்து, ஈஸிச்சேரில் சரிந்து கிடக்கும் தலைவர்களை நோக்கினன்.

''எழுந்திருங்கள்!''

எல்லோரும் கண்களைக் கசக்கிக்கொண்டு, தம் கைகளில் உள்ள மணிக்கூண்டில் நேரம் பார்த்தனர்.

''நாம் தொழிலாளரின் வாழ்வுக்கான வழி அமைத்துக் கொடுக்கும் ஊழியர்கள்! அதை நாம் மறந்துவிடக் கூடாது. நாம் அவர்களுக்குத் தலைவர்கள் அல்ல. அவர்கள் அப்படி எம்மை கணிக்கிறார்கள் என்பதால் நாமும் எமக்குத் தலைவர்கள் இல்லை!''

''ஆம் நாம் மறக்கவில்லை!''

அவர்கள் சோம்பல் முறித்தனர்.

''தொழிலாளி வர்க்கம் தம் வாழ்வுக்காகத் தம் உயிரைக் கொடுக்கத் தயாராகிக்கொண்டிருக்கின்றது!''

அவன் கூறியதைக் கேட்டு அவர்கள் முழித்தனர். அவர்களின் தீர்மானம் வேறு.

''அப்போ! நீ அவர்கள் புரட்சிக்கு ஆயத்தம் என்கிறாய்!''

''அதுதான் அவர்களின் தன்மை! அவர்களின் இயல்பான வழி!''

அவர்கள் மனக்கொதிப்புடன் உசாராகிவிட்டனர்.

''எமது முடிவு வேறு! சமாதான சகவாழ்வு என்ற கொள்கையின் அடிப்படையைத் தழுவி, ஜனநாயகத்தின் மூலம் எமது ஆட்சியைக் கொண்டு வரலாம்.''

அவனுக்கு அதிசயமும் ஆத்திரமும், அவர் அனுபவசாலி.

''ஏன் இந்த மாறுட்டம்!—ஓ! நன்றாகச் சொன்னீர்கள். 'எமது ஆட்சி!' ஆம் தொழிலாள வர்க்கத்தின் ஆட்சி அல்ல.''

தமது ஆத்திரத்தை அடக்கிக் கொண்டனர்.

''காலம் மாறிவிட்டது! முன்னிருந்த நிலைமை இன்று அதிக மாற்றம். நாங்களும் மாறிக் கொண்டோம்.''

''காலம் மாறிவிட்டது! முன்னிருந்த நிலைமை இன்று அதிக மாற்றம். தாங்களும் மாறிக் கொண்டோம்.'' எல்லோரும் ஒரு குரலாகக் கத்தினர். அவன் சிரித்தான்,

''முதலாளிகளின் உணவு, மாறவில்லை'.'

அவர்கள்நெஞ்சகங்கள்அடித்துக்கொள்கின்றன.

''இல்லை! இல்லை! இப்பொழுது முதலாளிகளுக்கு வசதிகளும், சுதந்திரமும் அதிகம்.''

மௌனமாக இருந்துவிட்டு, பெரிய உண்மையைக் கூறுபவர்கள் போல அநாயசமாகக் கூறினர்.

அவன் மீண்டும் சிரித்தான்.

''உணவுக்கு நோகாமல் உணவை உட்கொள்ளுவதாகக் காட்ட முதலாளிகள் அறிந்துவிட்டார்கள், அவ்வளவுதான்.''

உருவகம்

ஈஸிச்சேர்!

நகரத்தின் நடுவே அமைந்த மாளிகை மாடியில் ஆயுதம் தாங்கிய ஒரு கூட்டம் நகரத்தை அவதானித்துக்கொண்டிருந்தது. அவர்கள் நகரத்தின் காவலாளிகள் என்றால், முதலாளிகளின் காவல் நாய்கள்!

தொழிலாளிகளைப் பார்த்துக் கொண்டிருந்த அவர்களுக்கு மனதில் யோசனை தொட்டது. முகங்கள் கறுத்தன. தங்களுக்குள் கதைக்கத் தொடங்கினர்.

''இவர்கள் எதிர்த்துஎழுந்துவிட்டால் எந்த சக்தியும்தடுக்க முடியாது!''

''எமது ஆயுதத்தின்முன் இவர்கள் சிம்பிள்கள்!''

''மடையா! உனக்குச் சரித்திரம் தெரியவில்லை. எந்தப் பயங்கர ஆயுதங்களும் அவர்களைத் தோற்கடித்ததாகச் சரித்திரம் இல்லை.''

''இங்கு இது நடவாது! அவர்களின் தலைவர்கள்எப்பக்கம்!''

சொன்னவனின் முகத்தில் ஆனந்தம் பளிச்சிட்டது.

''இது என்ன அதிசயம்?''

''அவர்கள் எமது பாராளுமன்ற வழியைக் கொள்ளப் போகின்றார்களாம்?!'' எல்லோரும் கைகொட்டிச் சிரித்துக் கொண்டனர்.

''எமது பயம் தீர்ந்தது. அந்த வழியில் வந்தால், அவர்கள் எத்தனையோ பேர்கள் சிம்பிள்! நொருக்கிவிடுவோம்!''

அவர்கள் தேனீர் அருந்தச் சென்றுவிட்டனர்.

தலைவர்கள் பிடித்த பிடியை விடவில்லை. அவர்களின் தன்மை மாறியது. இறுக்கம் தளர்ந்தது! பிரச்சாரம் சரளமாகியது! எல்லோரையும் திருப்திப்படுத்தினர். மக்களின் செல்வாக்கு அதிகரித்தது.

தேர்தலில் பெரும்பான்மை ஸ்தானங்களைக்கைப்பற்றினர். அதிக குதூகலத்துடன் தம்தம் கதிரைகளில் சென்று அமர்ந்து கொண்டனர்.

'அரசாட்சி எமது கையில்!''

எல்லோரும் மண்டைக்குள் மகிழ்ச்சிகொண்டனர். அவர்களின் தலைவர் கடுமையான உற்சாகத்துடன் எழுந்து நின்றார்;

இனி எமதுபுரட்சியைச்செய்வோம்!''

அவர் கூறிவிட்டுஆசனத்தில் அமரவிலை.

''ஒருவரும் அசையக் கூடாது.''

பேய்க்குரலுடன், ஆயுதங்களின்ஓசையுடன்,காலடிகளின் ஓசைகளும் கலந்து ஒலித்தன.

தலைவர்கள் அனைவரையும் விலங்கிட்டு ஒரு அறையுள் அடைத்துக் காவலிட்டனர்,

பெனடிக்ற் பாலன்

''நாம் அப்படி எண்ணவில்லை!''

அவன் கண்களை வெட்டிக் கொண்டான்.

''உணவுக்குத்தான் தெரியும் அவர்களின் பற்களின் கொடுமை!''

அவர்கள் கண்கள் சிவந்தன. ஆத்திரம் தலைக்கேறிவிட்டது!

''நீ ஒரு போராளி!''

''தொழிலாளி வர்க்கத்தின் போராளி என்று விளக்கமாக அறிந்தால் நன்றி!''

தங்கள் கால்களில் அணிந்த சப்பாத்துக்களை சினத்தில், நிலத்தோடு உரசிக்கொண்டனர்,

''நீ இப்போது என்ன சொல்கிறாய்?''

''உங்களுக்கு விளக்கம் தேவையில்லை. தொழிலாளி வர்க்கம், புரட்சியின் மூலந்தான் நிரந்தர ஆட்சியை ஏற்படுத்தமுடியும். மற்ற வழியில் நிலைக்காது!''

''எங்கள் முடிவு வேறு! நீ நித்திரை கொண்டுவிட்டா வருகிறாய்?''

''நான் நித்திரை கொண்டதில் ஒன்றுமில்லை. உங்கள் நித்திரையைக் குழப்பிவிட்டேன் என்பதுதான் உங்கள் துக்கம்!''

''நீ ஒரு துரோகி! வெளியேறு!''

அவன் மௌனமாக எழுந்தான். அவர்கள் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

''உங்கள் வழியை அமுலாக்குங்கள்!''

அவன் வெளியே நடந்துவந்தான். தொழிலாளர்கள் வேலைவிட்டு, களைப்புடன் வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தனர்.

காவலாளித்தலைவனின் செயல் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. வாக்களித்தமக்கள் எங்கோ இருந்தனர்.

துரோகியாகச் சென்றவன் ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

தலைவர்களின் கதை முடிந்தது!

தூயநெறி ''பொதுவுடமை'' வேண்டும்

எல்லாமே எல்லார்க்கும் வேண்டும்—உலகில்
எல்லோரும் சமமாக வேண்டும்—பணத்தில்
வல்லோர்கள் மாய்ந்திட வேண்டும்—உழைக்க
வல்லோர்கள் தோன்றிட வேண்டும்

மதமொன்றுய் மாறிட வேண்டும்—பதவி
மதமிங்கு அழிந்திட வேண்டும்

முதலாளி தொழிலாளி பேதம்—இங்கு
முற்றுகவே ஒழிய வேண்டும்

உள்ளவனைப் பார்த்தேங்கி உருகும்—ஏழை
ஒருவனும் இல்லாது வேண்டும்

இல்லாத நிலைமாற வேண்டும்—உடைமை
எல்லோர்க்கும் பொதுவாக வேண்டும்

இனவெறி இல்லாது வேண்டும்—ஆனால்
இனப்பற்று நிச்சயம் வேண்டும்

மனநிலை ஒன்றுக வேண்டும்—இந்த
மாநிலம் பொதுவாக வேண்டும்

நிதமிங்கு உழைப்பவர் வேண்டும்—உண்மை
நெறியிலே வாழ்பவர் வேண்டும்

இதமென்ற நிலைபெறவே பலரை—உலகில்
ஏய்ப்பவர் மாய்ந்திடவேண்டும்

இன்பத்தைப் பொதுவாக்க வேண்டும்—உலகில்
எல்லோரும் ஒன்றுக வேண்டும்

துன்பத்தைத் துரத்திட வேண்டும்—இதற்குத்
தூயநெறி ''பொதுவுடைமை'' வேண்டும்.

—பண்டாரவளை கு. இராமநாதன்

விடுதலை வீரன்

கிரிமாவின் கடைசிக் கடிதம்

ஸ்பெய்னில் பாசிஸ்ட் பிராங்கோவின் கொலை பாதகப் போலிசாரால் படுகொலை செய்யப்பட்ட ஸ்பானிஸ் விடுதலை விரன், கம்யூனிஸ்ட் ஜூலியன் கிரிமாவ் ஸ்பெய்னில் காரபாஞ்சில் சிறையிலிருந்து தன் மனைவி ஆஞ் சௌடாவுக்குக் கடைசியாக 1963 ஏப்ரல் 12-ந் தேதி ஓர் கடிதம் எழுதினர்.

வீரமும், தன்னம்பிக்கையும் நிறைந்திருந்த அக்கடிதத்தில் கிரிமாவ் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

''தண்டனை கொடுக்கப்பட்டவுடன் அதனுடைய விளைவு பற்றி நான் உனக்குத் தெரிவிக்கிறேன்- நீ அமைதியாகவும் (சஞ்சலமில்லாமலும்) இருக்கவேண்டுமென நான் உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். அது ஏன் அவ்வாறு இருக்கக்கூடாது என்று நினைப்பதற்கு எவ்வித காரணமும் இல்லை.

என்னுடைய உடல்நிலை கொஞ்சம் பரவாயில்லை.. என்னை எவ்வாறு சரியாகப் பாதுகாத்துக்கொள்வது என்பது எனக்குத் தெரியும்.

இதைப்பற்றி எதுவும்குழந்தைகளிடம்கூறுதே. அதைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்வதற்கு இன்னும் காலமிருக்கிறது. இப்பொழுது அவர்கள் விளையாடவும், சந்தோஷமாகவும் இருக்கவேண்டும்.

இன்று நான் என் சகோதரரைப் பார்த்தேன். நீ என்னைக் கேட்டுக்கொண்டபடி உனக்காக நான் அவரைக்கட்டியணைத்துக்கொண்டேன். அது அவருக்கு மகிழ்ச்சி தந்தது.

குடும்பத்தினர் அனைவரையும் நான் கட்டித் தழுவுகிறேன். அவர்கள் செய்த உதவிக்காக அவர்களுக்கு என் நன்றி. உன்னையும் குழந்தைகளையும் நான் கட்டித் தழுவுகிறேன். உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன். உன்னுடைய அம்மாவுக்கு என்னுடையவணக்கத்தைத் தெரியப்படுத்தவும்.''

—ஜூலியன்.

அனுப்பியவர்: கீரன்.

"ஆயுதந்தாங்கிய புரட்சியே கியூபாவுக்கு வெற்றிதந்தது" "சமாதான-சகஜீவனம் அடிமைத்தளையை நீடித்திருக்கும்"

நியூபஸார்-கிரான்பாஸ் வாலிபர் சங்கக் கூட்டத்தில் என். எல். பெரேரா உரை

"இரண்டாவது சர்வதேசிய அகிலத்தில் திரிபுவாதிகளுக்கு எதிராக, தீவிரமாக, தைரியத்தோடு அன்று மாமேதை தோழர் லெனின் போராடியதினால்தான் இன்று உலகத்தில் மிகப் பெருஞ் சக்திவாய்ந்திருக்கும் கம்யூனிஸ்ட் இயக்கம் மலர்ந்தது'' என்று, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் என். எல். பெரேரா அவர்கள். நியூபஸார்-கிரான்பாஸ் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் சொற்பொழிவாற்றும்போது கூறினர்.

மேலும் தொடர்ந்து பேசுகையில், சமாதான-சகஜீவனம் என்று கூறிக்கொண்டிருந்தால் இன்று கியூபா மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிமையாக இருந்ததிலிருந்து மீள முடியுமா? கியூபாவில் உயிர்வாழும் சிறு குழந்தைகள் முதல் தாய்மார்கள் வரை சகல பிரஜைகளும் தம் தாய்நாட்டின் விடுதலைக்காக ஆயுதந்தாங்கிப் போராடியதினால்தான் இன்று கியூபாவை அடிமையாக வைத்திருந்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வெளியேறினர் என்று ரைத்தார்.

கூட்டத்தில், வாலிபர்சங்க தொழும்பு ஜில்லாக் கமிட்டி செயலாளர் ஜெயசோம விஜயத்திலக்க, ஜினதாஸ ஹேவகே ஆகியோர் பேசினர்.

திரிபுவாதிகளை மிகத் தீவிரமாக எதிர்த்துப் போராடும் கம்கருவா, தொழிலாளி, தருண லங்கா, யுவசக்தி ஆகிய பத்திரிகைகளை இப்பகுதி மக்களிடம் கொண்டு சென்று பிரச்சாரஞ் செய்வதற்கான வேலைத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர் டபிள்யூ. ஏ. தர்மதாஸ உட்பட பெரும்பான்மை மத்திய கமிட்டியின் தலைமையை ஏற்றுக்கொள்வதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாண்டு நிர்வாகிகளாகக் கீழ்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்-எம். எம். சுஹைர், உப-தலைவர்-டி. பி. ஹெட்டி ஆராச்சி, செயலாளர்-பி. அந்தோனி, உப-செயலாளர்-டி. கே. எம். சங்கதாஸ, கமிட்டிக்கு தோழர்கள் கே.ஏ. தர்மசேன, எஸ். ஏ. சந்திராவதி, பி. வி. கிருஷ்ணன், சாப்தீன், டி. கே. லியனகே, வை.பிரேமதாஸ, அந்தோனி ஜோஸப், சந்தரதாஸ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரிபுவாதிகள் வெளியேற்றப்பட்டனர்

வெள்ளவத்தை வடக்கு வாலிபர் சங்கம்

இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனத்தை சீர்குலைவுபடுத்த படுபிற்போக்கான சதித்திட்ட வேலைகளில் ஈடுபட்டுவரும் எச். ஜி. எஸ். ரத்னவீராவின் பாழடைந்த சம்மேளனத்தின் சீர்குலைவு வேலைகளை நிராகரிப்பதுடன், கடந்த வாலிபர் சம்மேளன தேசிய மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட வாலிபர் சம்மேளனத்தின் மத்தியக் குழுவில் பெரும்பான்மை அங்கத்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தோழர்கள் டபிள்யூ. ஏ. தர்மதாஸ, எச். பி. அமரபால ஆகிய இருவரினதும் தலைமையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும், இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனத்தின் மத்தியக் குழுவின் தலைமையையும், வழிகாட்டு தலையும் மேற்படி எமது வாலிபர் சங்கம் ஏற்றுக்கொள்கிறது.

திரிபுவாதிகளின் கையாட்களாக வேலைசெய்யும் எமது வாலிபர் சங்க அங்கத்தவர்களாகிய டி. பி. யசோதிஸ், டி. உபாரிஸ், ராஜா கொல்லுரே, பீட்டர் வீரக்கூன் ஆகியவர்களை எமது வாலிபர் சங்கத்திலிருந்து வெளியேற்றுவதென்றும் ஏகமனதாகத்தீர்மானிக்கப்பட்டது.

எட்வின்ஹேவா விதான,
செயலாளர்,

வெள்ளவத்தை வடக்கு கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம்.

திருக்கோணமலை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம்

கடந்த 28-11-63ல் தோழர் சிவலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற திருக்கோணமலை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் கூட்டத்தில் கீழ்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. எச். ஜி. எஸ். ரத்னவீராவை செயலாளராகக் கொண்ட வாலிபர் சம்மேளனத்தை இக் கூட்டம் நிராகரிக்கிறது. தோழர் தர்மதாஸ மீது பூரண நம்பிக்கை தெரிவிக்கிறது.
2. திருக்கோணமலைக்கு அனுப்பப்பட்ட போலி ''தருண லங்கா'' பத்திரிகையை திருப்பி விடுவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

எமது 7-வது கட்சி காங்கிரஸ்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 7-வது தேசிய மாநாட்டைக் கூட்டுவது சம்பந்தமாக நாம் விடுத்த அறிக்கையை, கட்சியின் சட்டத்தை மீறிய மாநாடு என்று திரிபுவாதிகள் குற்றம் சுமத்துகிறார்கள். பாவம், சட்டத்தை நாம் மீறுவதாகக்கூப்பாடு போடும் இம்மட்டிகள், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தனது 22-வது மாநாட்டில் (இக்காங்கிரஸ் முடிவுகளை திரிபுவாதிகள் பரிபூரணமாக ஏற்றுள்ளனர்) நிறைவேற்றிய 31, 32-வது சட்டவிதிகளை மறந்து விட்டார்கள் போலும். அச்சட்ட விதிகளை இங்கு தந்துள்ளோம். இதைப் படித்துவிட்டு அவர்கள் கூறட்டும், யார் பொதுநெறியை மீறுபவர்களென்று:

சட்டபூர்வமானது இதோ ஆதாரம்

[31] சோவியத் நாட்டுக்கம்யூனிஸ்ட் கட்சியின் அதி உயரிய அமைப்பு கட்சி மாநாடேயாகும். கட்சி மாநாடுகளை மத்திய கமிட்டி குறைந்தது நான்கு வருடங்களுக்கு ஒரு முறையாவது கூட்டுதல் வேண்டும். கட்சி மாநாட்டைக் கூட்டும் ஆலோசனையும், அதன் வேலைத் திட்டமும் குறைந்தது மாநாட்டின் ஆறுவாரங்களுக்கு முன்கூட்டி அறிவிக்கப்படல் வேண்டும். மத்திய கமிட்டியின் முன்முயற்சியில் அல்லது முந்திய கட்சி மாநாட்டின் பொழுது இருந்த அங்கத்துவத் தொகையில் மூன்றில் ஒரு பகுதிக்குக் குறையாதவரின் வேண்டுகோளுக்கிணங்க விசேஷ மாநாடுகள் கூட்டப்படல்வேண்டும். விசேஷ மாநாடுகள் இரண்டு மாதங்களுள் கூட்டப்படல்வேண்டும். முழுக் கட்சி அங்கத்துவத் தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டவர் பங்குபற்றினால் மாநாடு சரியான முறையில் அமைந்ததாகும்.

கட்சி மாநாட்டின் பிரதிநிதித்துவ விகிதம் மத்திய கமிட்டியினால் தீர்மானிக்கப்படும்,

[32] 31-வது ஷரத்தின்படி மத்திய கமிட்டி குறிக்கப்பட்ட காலத்துள் விசேஷ மாநாட்டைக் கூட்டத் தவறினால், விசேஷ மாநாட்டைக் கோரிய அமைப்புக்கள், ஸ்தாபன அமைப்புக்குழு ஒன்றை உருவாக்க உரிமையுண்டு. இந்த ஸ்தாபன அமைப்புக்குழுவுக்கு, விசேஷ மாநாட்டைக் கூட்டுவதையொட்டி மத்திய கமிட்டிக்கு உள்ள உரிமைகள் அனைத்தும் உண்டு.

எம்மைப் பொறுத்த மட்டில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 6-வது காங்கிரஸ் சட்ட விதிகளின்படி, சென்ற ஆண்டில் 7வது தேசிய மாநாடு கூட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், திரிபுவாதத் தலைமை மாநாடு கூட்ட மறுத்துவிட்டதுடன் அதற்கான காரணங்களும் சொல்லவில்லை.

ஆனால், மாநாட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயங்களைத் தான்தோன்றித்தனமாக தமக்கிடையில் முடிவு செய்து கட்சியைச் சின்னபின்னப் படுத்திவிட்டார்கள். ஏப்ரல் மாதம் திரிபுவாதிகள் நடத்தப் போவதாகக் கூறும் மாநாடு, வெறும் பிதற்றலாகும். காரணம் இதுவரை அதற்கான தயாரிப்பே செய்யப்படவில்லை.

ஹொரணை வாலிபர்கள் எம் அணியில்

இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனத்தின் ஹொரணை மாவட்டக் கமிட்டிக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

தோழர் பி.எஸ்.பி. ஜெயத்திலக்காவின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், கீழ் வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன:

1. திரிபுவாதிகளின் வாலிபர் சங்கத் தலைமையை நிராகரிப்பது.
2. கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள திரிபுவாதத் தலைவர்களின் கீழ்த்தர சீர்குலைவு வேலைகளைக் கண்டிப்பது.

கூட்டத்தில், தோழர்கள் கணேசிரி, கருணசேன, தர்மதாஸ ஜெயக்கொடி, சிறில் சேனரத்தின, ஆனந்த ரணதுங்க, பி.என். ஜெயத்திலக்க, கே. டி. பியதாஸ ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கூட்டமுடிவில் திரிபுவாதிகளாகிய பி. எஸ். பி. ஜெயத்திலக்க, ஆனந்த ரணதுங்க ஆகியோர் வெளியேற்றப்பட்டனர்.

ஹிங்குலை முற்போக்கு வாலிபர் சங்கம்

அண்மையில் நடந்த ஹிங்குலா முற்போக்கு வாலிபர் சங்கக் கூட்டத்தில், திரிபுவாதிகளின், சீர்குலைவாளர்களின் தலைமையை நிராகரிப்பதென முடிவெடுக்கப்பட்டது.

அதோடு, உண்மையான மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்டுகளின் தலைமையிலுள்ள வாலிபர் சங்கத் தலைமைக்குப் பூரண ஆதரவு தெரிவிக்கும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

தொடர்ந்து போராட எம் ஆதரவு

மாதகல் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம்

திரிபுவாதிகளின் தலைமையில் உருவாகியுள்ள வாலிபர் சங்கத்தை நாங்கள் நிராகரிக்கிறோம். உண்மையான மார்க்ஸிஸம்-லெனினிஸத்திற்காகப் போராடும் தாய்ச் சம்மேளனத்துடன் தொடர்ந்து போராட உறுதி கொள்வதுடன், பூரண ஆதரவு தரவும் முன்வருகிறோம்.

செளலாளர்,
வ. கந்தசாமி.

தொழிலாளி

புது வழி காட்டும் பிரமாண்ட மாநாடு

—1-ம் பக்கத் தொடர்

இந்நிகழ்ச்சிக்குப் பின் தோழர் சார்ல்ஸ்ஹாமி மாநாட்டு நிகழ்ச்சிகளை நடத்திச்சென்றார்.

அவர் தனது உரையில், ''மெண்டிஸ் தனது உரையில் தனது கடந்தகால சேவைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். என் வாழ் நாள் பூராவையும் நான் சி. டி. யூ. எப்.புக்காக அர்ப்பணித்துள்ளேன். இங்குள்ள முக்கியத்துவம், கடந்த கால ரிக்கார்டுகள் மட்டுமல்ல. அவைகளைவிட மேலாக, இன்றைய கொள்கைகள், நடவடிக்கைகள், வேலைகள்'' என்று குறிப்பிட்டார்.

தோழர் சண்முகதாசன் எம். ஜி. மெண்டிஸின் பொய்களுக்கு நீண்ட தனது உரையில் ஆணித்தரமாக பதிலளித்தார்.

மாலை நிகழ்ச்சிகள், கேகாலை டிஸ்றிக்ட் பீடித் தொழிலாளர் சங்கத்தின் தோழர் எஸ். ஏ. மஜீதின் உரையுடன் ஆரம்பமாகியது.

அடுத்துப் பேசிய தோழர் ஆர். ஜி. நாதன் (ஹோட்டல், பேக்கரி தொழிலாளர் சங்கம்), எம். ஜி. மெண்டிஸ் கூறிய சில பொய்களை அம்பலப்படுத்தினர்.

தோழர் ஜே. ஏ. கருணரத்தினா (இலங்கை உரம் உற்பத்தித் தொழிலாளர் சங்கம்) பேசுகையில், குருஷ்சேவின் திரிபுவாதக் கொள்கையை நாம் ஏற்காத காரணத்தால் தோழர் மெண்டிஸ் வெளியேறிவிட்டார். திரிபுவாதத் தலைமைக்கு எதிராக, புரட்சிகரத் தலைமையொன்றை உருவாக்க சி.டி.யூ.எப். தயாராகவிருக்கிறது என்றார்.

தோழர் ஏ. பி. பீட்டர் (சினிமா தொழிலாளர் சங்கம்), சி.டி.யூ.எப். மாநாட்டின் உலக முக்கியத்துவத்தை விளக்கினர்.

தோழர் ஏ. டி. வீரசேகரா (இலங்கை கள்ளுத் தொழிலாளர் சங்கம்), இத்தகைய மகத்தானதொரு மாநாட்டில் நான் முன்னர் கலந்துகொள்ளவில்லை என்று குறிப்பிட்டார்.

சினிமாப்படக் காட்சியுடன் முதல்நாள்நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

19-ந் தேதி நிகழ்ச்சிகள்

19-ந் தேதி நிகழ்ச்சிகள், வாழ்த்துச் செய்திகளுடன் ஆரம்பமாகியது. அல்பேனியா, சோவியத் யூனியன், கியூபா, செக்கஸ்லவாக்கியா, போலந்து, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ருமேனியா ஆகிய நாட்டுத் தொழிற் சங்கங்கள் அனுப்பிய வாழ்த்துக்கள் வாசிக்கப்பட்டன.

இதன்பின், சீனப் பிரதிநிதி உரை நிகழ்த்தினர்.

பின்னர், இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க அமைப்புச் செயலாளர் தோழர் தம்மிக்க குணதாஸா பரிசீலனைக் கமிட்டியின் அறிக்கையை சமர்ப்பித்தார்.



என். சண்முகதாஸன்
பொதுச்செயலாளர்

இதைத் தொடர்ந்து செயலாளர் அறிக்கையில் விவாதம் துவங்கியது.

விவாதத்தில், தோழர்கள் கே.ஏ. விமலபால (இலங்கைத் தொழிலாளர் சங்கம்), எஸ். சமன் டி சில்வா (இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம்), கே. வி. கிருஷ்ணகுட்டி (மட்டக்களப்பு தொழிற் சங்கப் பிரதிநிதி), ஈ. எம். பியசேன (இலங்கைப் பொதுத் தொழிலாளர் சங்கம்—பாட்டாக் கிளை), ஏ. ஜி. ஏ. டி. சில்வா (இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்க—பதுளைக் கிளை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதியில், பொதுச் செயலாளர் அறிக்கை சபைமுன் வைக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மாலை நிகழ்ச்சியில், தோழர் ஏ. ஜெயசூரியா பிரேரித்தஅரசியல் தீர்மான விவாதம் ஆரம்பமாகியது.

விவாதத்தில், தோழர்கள் ஏ. ஹெக்டர் (தோயிலை, ரப்பர் தொழிலாளர் சங்கம்), எச்.பி. ஆரியதாஸ (எஞ்சினியரிங் தொழிலாளர் சங்கம்-பொனர்ல்ஸ்லிமிட்டட்),டி.ஏ. சேதுங்க (அச்சுத் தொழிலாளர் சங்கம்), எம். சி.எம்.சாபி (எஞ்சினியரிங் தொழிலாளர் சங்கம்), ஸ்டீபன் கொஸ்டா (வெள்ளவத்தை மில்ஸ்), பீரிஸ் (இலங்கை மோட்டார் தொழிலாளர்சங்கம்)சாஹுல் அமீது (துறைமுகத் தொழிலாளர் சங்கம்), முஹிதீன் பிச்சை (தேயிலை, ரப்பர் தொழிலாளர் சங்கம்), டி. என். நதுங்கே (கண்டி தொழிற் சங்கப் பிரதிநிதி), டானியல் (இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம்) ஆகியோர் கலந்து கொண்டனர். தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தோழர் ஈபர்ட் சில்வா 21 கோரிக்கைத் தீர்மானத்தைப் பிரேரித்தார்.

20-ந் தேதி நிகழ்ச்சி

தோழர் தங்கராசாவின் தலைமையில் ஆரம்பமான மூன்றும்நாள் நிகழ்ச்சியில் தோழர் பத்மசேன மெண்டிஸ் கம்கறுவா—தொழிலாளி வளர்ச்சி பற்றிய தீர்மானத்தைப் பிரேரித்தார்.

இதையொட்டி, தோழர் பிரேமலால் குமாரசிரி நீண்ட தொரு உரை நிகழ்த்தினர். தோழர் பிரேமலால பிரதிநிதிகள் பிரமாண்ட கரகோஷத்துடன் வரவேற்றனர்.

தீர்மானத்தின் போது தோழர்கள் ரொஸாரியோ பெர்ணாண்டு (இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்க—தலவாக் கொல்லைப் பிரதிநிதி), எஸ். சந்தியாகோ

ஏ. டி. சார்ல்ஸ்ஹாமி
முதுபெரும் தொழிலாளர்

பிள்ளை (காங்கேசண் சிமெண்ட் பெக்டரி), வால்டர் பெரேரா (தோட்ட ஊழியர் சங்கம்), எம். வி. கந்தையா (பொதுத் தொழிலாளர் சங்கம்), கே. ராகவன் (மட்டக்களப்பு தொழிற் சங்கக் கிளை), தர்மதாஸ ஜெயக்கொடி (இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கப்), வி. தர்மலிங்கம் (இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம்), பி. நடராஜா (காங்கேசன்துறை சிமென்ட் தொழிலாளர் சங்கம்) ஆகியோர் பங்கு கொண்டனர்.

மாலை நிழ்ச்சியில், வியட்நாம் நட்புறவு தினம் கொண்டாடப்பட்டது. கே. குலவீரசிங்கம் வியட்நாமின் போராட்ட வரலாறு பற்றி விளக்கினர். வியட்நாம் பிரதிநிதிகளும் பேசினர். இதைத் தொடர்ந்து வியட்நாம் பற்றிய சினிமாப்படக் காட்சி காண்பிக்கப்பட்டது.

21-ந் தேதி நிகழ்ச்சி

மாநாட்டின் இறுதி நாள், தோழர் சேதுங்க தலைமை தாங்கினர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி அங்கத்தவர்களான தோழர்கள் ஆரியவன்ஸ குணசேகரா (அனுராதபுரி முழுநேர ஊழியர்),கே.ஏ. சமரபால (மாத்தரை முழுநேர ஊழியர்) ஆகியோர் விசேஷ சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள்.

பின் கொரியப் பிரதிநிதிகள் உரை நிகழ்த்தினர். தோழர் செனிவரத்தினவின் உரைக்குப் பின், உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது. தோழர்கள் வாட்ஸன் பெர்னாந்து (தலைவர்), என். சண்முகதாசன் (பொதுச் செயலாளர்), கே. குலவீரசிங்கம்(பொருளாளர்) ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

மாலையில் பிரமாண்ட ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. ஊர்வலத்தில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் கடும் மழையையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டது இங்கு குறிப்பிடத் தக்கது.

தோழர் சார்ல்ஸ் ஹாமியின் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். சண்முகதாசனும், பிரேமலால் குமாரசிரியும் உரை நிகழ்த்தினர்.

ஸ்டாலின் தினம்

கடந்த வாரம் மாவானல்லையில் நடைபெற்ற ஸ்டாலின் தினக் கூட்டத்தில், பிரேமலால் குமாரசிரி, தேஜா குணவர்தன, எச்.எம்.பி. முஹிதீன், கே.வி. சிருஷ்ணக்குட்டி ஆகியோர் சொற்பெருக்காற்றினர்.

●

கடந்த 22-ந் தேதி கொழும்பு செஞ்சிலுவை மண்டபத்தில், ''ஸ்டாலின் வாழ்வும், தொண்டும்'' என்ற பொருள்பற்றி தோழர் என். சண்முகதாஸன் விசேஷ சொற்பொழிவு நிகழ்த்தினர்.

கடும் மழையையும் பொருட்படுத்தாமல் பெருந்திரளானோர் கூட்டத்தில் பங்கு பற்றினர்.

●

அச்சுத் தொழிலாளர் மாநாடு

இலங்கை அச்சுத்தொழிலாளர் சங்கத்தின் வருடாந்த மாநாடு, எதிர்வரும் 4-1-63ல், பிற்பகல் 2-30 மணிக்கு சி.டி.யூ.எப். தலைமைக் காரியாலயத்தில்(123, யூனியன் பிளேஸ் கொழும்பு-2) நடைபெறும்.

●

அடுத்த இதழில்

எம். ஜி. மெண்டிஸ் கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுக்கு பதில் தரும் முகமாக தோழர் சண்முகதாஸன் நிகழ்த்திய சொற்பொழிவுச் சுருக்கம் அடுத்த இதழில் இடம்பெறும். —ஆசிரியர்

வளர்ச்சி நிதி

கிளேரா குணவர்தன	1 00
ஏ. விக்ரமசூரியா	5 00
சி.எஸ். மனோகரன்	3 00
எஸ். தம்பி	2 00
பி. விந்தன்	3 00
எட்மன் துட்டுசேன	1 00
எஸ். ஜயகொடி (அரகாவில)	5 00
வர்மன்	4 00
பீ.ஜீ. டபிள்யு. அப்புஹாமி	4 00
டி.பி. விமலகுண	1 00
ஜே. செரியத்	5 00
டீ.சீ. ஜேமிஸ்	4 00
பீ.எச்.ஆர்.எம். உக்குபண்டா	1 00
எம்.டபிள்யு. ரணசிங்க	1 00
பி.எம். சரூக்	1 00
சரத் குரே	3 00
பி.எ.எஸ்.	2 00
கே. அபேதீர	1 00
ஏ. ஹெக்ட்ர் தாப்ரோ	4 00
என். இந்திரஜித்	4 00
ஏ. ராஜன்	4 00
கே. கமலன்	4 00
ஜீ.வி.ஏ.லூவிஸ் பெரேரா	4 00
சுசிலா கருணரத்ன	1 00
மெனிக்கே ஜயசூரிய	1 00
ஏ. ஜயசூரிய	1 00
கே. ஜஸ்டின் பெர்ணாந்து	1 00
மொத்தம்	585 00

பதிப்பித்து வெளியிடுபவர்: ஹசன் மொஹிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: ஆர். ஜே. ஆர். அச்சகம், 90/1, கியு வீதி, கொழும்பு-2.

தரமான தாள்கள்

அச்சுக்கு நேர்த்தியானவை

பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள்

அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:

இலங்கை டிரேட் எக்ஸ்சேஞ்

மெர்கண்டைல் ஹவுஸ்,
51/6, ராணி வீதி, கோட்டை.